Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

போன: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 25 ஆம் நாள் ஜ. ஆகிர் 1 (10-11-61) வெள்ளிக்கிழமை இதழ் 230

# ஆண்களின் விவாக வயது 18

## பெண்களுக்கு 16

### விவாகச் சட்டத்தில் பல திருத்தங்கள்

### பார்லிமெண்டில் மசோதா வரும்

கொழும்பு, வியாழன்

விவாகச் சட்டத்தில் அரசாங்கம் பல திருத்தங்களைச் செய்ய இணங்கியுள்ளது. இதன்படி பெண்கள் திருமணம் செய்யக்கூடிய வயது 16 ஆகவும் ஆண்களுக்கு 18 வயதாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

தற்பொழுது பெண்கள் 12 அல்லது 14 வயதில் திருமணம் செய்துகொள்ளலாம். ஆண்கள் 16 வயதில் மணம் செய்யலாம். விவாக, விவாகரத்து கமிஷனில் தொடர்பான சில மாற்றங்களை ஏற்படுத்த உள்நாட்டு மந்திரி சிபார்சு செய்துள்ளார்.

மந்திரி விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவிருக்கும் இம்மசோதா சம்பந்தமாக சட்ட நகல் தயாரிப்பாளர் சட்ட விதிகளைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்.

## சுட்டுக் கொலை இருவர் கைது

மாங்குளம், வியாழன்

மாங்குளத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக எஸ். அப்பாத்துரை என்பவரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## 1 டன் உப்பு இறக்குமதி ரூ. 30 செலவு

கொழும்பு, வியாழன்

பாகிஸ்தானிலிருந்து கொழும்புக்கு ஒருடன் உப்பு கப்பல் மூலமாக வருவதற்கு ரூ. 25 செலவாகிறது. ஆனல் கொழும்பு வந்து சேர்ந்ததும் கப்பலிலிருந்து இறக்குமதிசெய்வதற்கு ரூ. 30 செலவாகிறது என உப்பு இலாகாவினர் மதிப்பிட்டுள்ளனர்.

---

## பெற்றோர்கள் மீது கல்விமந்திரி கட்டாயம்

கொழும்பு, வியாழன்

தமது தொகுதிகளிலிருக்கும் பாடசாலைகளுக்கே, பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்புமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள் என கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் பிள்ளைகளை எந்தப் பாடசாலைகளிலும் சேர்ப்பதற்கு அனுமதியளிக்க கல்வி டைரக்டர் தீர்மானித்துள்ளார்.


## யாழ்ப்பாண நூல்நிலைய நிதிக்கு கொடி விற்பனை

### தாராளமாக உதவுமாறு மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலைய கொடித்தினம் சம்பந்தமான விசேஷ ஆலோசனைக் கூட்டம் இம்மாதம் 13-ம் திகதி மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கொடித்தினம் சம்பந்தமாக யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளார்

யாழ்ப்பாணப் பொதுமக்கள்



புதியகட்டட அமைப்பைக்கொண்டகொடி

நலன் கருதி நாங்கள் பெரியதொரு நூல் நிலையத்தை உருவாக்கியுள்ளோம் என்பதையும் இந்நூல் நிலையக் கட்டட

(4-ம் பக்கம் பார்க்க)

## கார்கள் கள்ளக் கடத்தல் சுங்கஇலாகா கைப்பற்றியது

கொழும்பு, வியாழன்

நேற்று சுங்க இலாகாவினர் கள்ளக்கடத்தல் செய்யப்பட இருந்த பல விலையுயர்ந்த பொருட்களைக் கைப்பற்றினர்.

3 கார்கள், 15 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள், ட்ரூன்ஸிஸ்டர் றேடியோக்கள், பெருவாரியான றேடியோமின் சார உபகரணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்ட பொருள்களில் இருந்தன.

## ஜனதா எக்ஸ்பிரஸ் தடம்புரண்டது

### நால்வர் பலி

சென்னை, நவ. 9

இன்று சென்னையிலிருந்து பம்பாய் சென்ற 'ஜனதா எக்ஸ்பிரஸ்' விபத்துக்குள்ளாகியதால் என்ஜின் தடம்புரண்டது. 3 பெட்டிகளும் சேதமடைந்தன. இதன்காரணமாய் சாரதியும் 3 பிரயாணிகளும் மாண்டனர். 9 பேருக்குக் காயம் ஏற்பட்டது. 5 பேருக்குச் சொற்பகாயம் ஏற்பட்டது. தென்னிந்தியாவில் மற்றும் இரு குட்ஸ் ரயில்கள் விபத்துக்குள்ளாகின என அறிவிக்கப்பட்டது. சில வாகன்கள் தடம்புரண்டன. எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

## கொழும்பு செல்லவேண்டியவர் திருச்சி விமானத்தில் பறந்தார்!

### கடலைக் கண்டு பதறிய பின் பலாலிக்கு கொண்டுவரப்பட்டார்

தெல்லிப்பழை, வியாழன்

பாஸ்போர்ட் இல்லாமலும், பிரயாணச் செலவு எதுவுமில்லாமலும் ஒருவர் பலாலியிலிருந்து விமானமூலம் பறந்து சென்று இந்தியக்கரையைக் கண்டு, திரும்பவும் பலாலியை வந்தடைந்த சம்பவமொன்று பலாலி விமான நிலையத்தில் நிகழ்ந்துள்ளது.

பலாலி விமான நிலையத்தில் இரு விமானங்கள் புறப்படுவதற்குத் தயாராக நின்றன. அவசரஅவசரமாக ஓடிவந்த பிரயாணி ஒருவர் திருச்சிக்குச் செல்லும் விமானத்தில் ஏறினர். இது திருச்சி செல்லும் விமானம் என்பது அவருக்கு அப்போது தெரியாது. விமானம் பறந்தது. இந்தப் பிரயாணி விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்ணடி மூலமாக வெளிப்புறக் காட்சிகளை பார்த்துவந்தார். அப்பிரயாணி விமானம் கடலுக்குமேலால் பறப்பதைக்கண்டு, விமான உபசரிப்புப் பெண்மணியிடம் கொழும்பு செல்லும் விமானம் ஏன் கடலுக்குமேலால் பறந்து செல்லுகிறதென்று வினவினர். விமான உபசரிப்புப் பெண்மணி இந்த விமானம் திருச்சிக்குப் போகிறதென்று தெரிவித்தார். பிரயாணி, தான் கொழும்புசெல்ல வேண்டியவர் என்றும், தவறுதலாக இந்த விமானத்தில் ஏறிவிட்டதாகவும் கூறினர். உபசரிப்பு மங்கை இத்தகவலை விமான ஓட்டியிடம் தெரிவிக்கவே, விமான ஓட்டி. வானொலிமூலம் பலாலி விமான நிலையத்துடன் தொடர்புகொண்டு கொழும்பு செல்லவேண்டிய பிரயாணி ஒருவர் தமது விமானத்தில் பிரயாணஞ் செய்கிருரெனக் கூறினர். அப்பிரயாணியைப் பலாலியில் திரும்பக் கொண்டு வந்து இறக்கிச்செல்லுமாறு தகவல் கொடுக்கப்பட்டது. விமானம் திரும்பவும் பலாலி வந்து சேர்ந்தது. பிரயாணி கொழும்பு செல்லும் விமானத்தில் பிரயாணமானர்.

## குழந்தைகள் அரசாங்கத்தின் செல்வங்கள்

### அவர்களின் வளர்ச்சிக்கே தேசிய கல்வித் திட்டம்

### திருமலையில் உதவி கல்வி மந்திரி

திருக்கோணமலை, புதன்

"இந்நாட்டில் வதியும் குழந்தைகள் அரசாங்கத்தின் செல்வங்கள் ஆச்செல்வங்களின் பொருளாதார, சமுதாய நலனுக்காக ஸ்ரீமாவோ அரசாங்கம் தனது சக்திக்குட்பட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தயாராயிருக்கிறது. வருங்கால சந்ததியினரான இக்குழந்தைகளை, சிறுவர் சிறுமியர்களை புத்தகப் பூச்சிகளாக்க முடியாது. ஆகவேதான் எமது அரசாங்கம் காலஞ் சென்ற பண்டாரநாயக்கா அவர்கள் கண்டகனவான தேசியக் கல்வித்திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருகிறது. வளரும் பயிர்களான இக்குழந்தைகளை புத்த அறிவைக்கொண்டு வளர்க்காமல், தொழிற் கல்வி முறைகளையும் போதித்து வளர்த்தால்தான் இலங்கையின் வருங்காலம் சுபிட்சமடையும்" என்று கல்விமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசியும், ரக்வானை எம். பி. யுமான திரு. வி. டி. ஜி. கருணரத்ன, திருமலை அரசினர் ஆரம்பபாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

"மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் தூய எண்ணத்துடன் ஒத்துழைத்தால்தான் முன்னேற்றத்தை அடைய முடியும். ஆசிரியர்கள் மட்டும் பாடுபடுவதென்பது இயலாதகாரியம். சரியான அல்லது தவருன வழிகளில்ஓர் மாணவன் ஈடுபடுவதற்கு அவனிருக்கும் சூழ்நிலைதான் ஏதுவாயிருக்

(4ம் பக்கம் பார்க்க)

---

## தற்காலிக சபை முதல்வர்

கொழும்பு, வியாழன்

மந்திரி திரு. ஸி. பி. டி, சில்வா வெளியூர் சென்றுள்ளதால் அவருக்குப் பதிலாக உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தற்காலிக சபைமுதல்வராகக் கடமையாற்றுவார்.

## ரூ. 40,000 பெறுமதியான பொருள்கள் திருட்டு

### புறக்கோட்டையில் சம்பவம்

கொழும்பு, வியாழன்

சென்ற செவ்வாய்கிழமை கொழும்பு புறக்கோட்டையிலுள்ள கடையொன்றின் கூரை பிரிக்கப்பட்டு அங்குள்ள விலையுயர்ந்த பொருள்கள் களவாடப்பட்டன. ரூ. 40 ஆயிரம் பெறுமதியான கைக்கடிகாரங்கள், தங்ககாப்புகள், மோதிரங்கள், சங்கிலிகள் முதலியன களவாடப்பட்டதாகத் தெரிகிறது.

---

## கியூபா தூதுகோஷ்டி

கொழும்பு, வியாழன்

கியூபா விவசாய மந்திரி தலைமையில் வந்துள்ள தொழில்நுட்ப நல்லெண்ணத் தூது கோஷ்டி வருகிற 13ம் தேதி பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவைச் சந்திக்கும்.

---

## செக். பொருட்காட்சி

கொழும்பு, வியாழன்

கொழும்பில் சீக்கிரம் செக்கோஸ்லோவேகிய பொருட்காட்சி ஒன்று ஆரம்பமாகும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

### தேவை

எலக்ரோ பிளேட்டிங் வேலை தெரிந்த ஒருவர்தேவை. அதாவது மருந்து வகைகள் நன்ருகத் தெரிந்தவராகவும் மருந்து வைக்கும் தொட்டிகளைப் பற்றி அறிந்தவராகவும் எல்லா லோகங்களையும் எலக்ரோ பிளேட் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். பழைய அனுபவங்களையும் தராதரத்தையும் எழுதி விண்ணப்பிக்கவும். யாழ். உலோகத்தொழிற்சாலை (Yarl Metul Industris) 250, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

அனுபவமுள்ள நடிகர் நடிகைகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச்செய்க. மனேஜர், ஏச். சி. (H. C.) பிலிம்ஸ், நம். 29, பீச் ரோட், யாழ்ப்பாணம்.

---

### விற்பனைக்கு

EN தொடர்பு இலக்கமுள்ள பேர்ஜோ கார் விற்பனைக்கு நல்லநிலைமையில் இருக்கின்றது. நேரில் வந்து பார்வையிடலாம். 361, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

---

## ஊரெழு கொலை வழக்கு
### இம்மாதம் 18-ம் திகதி மேல்விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

கொலைவழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாரிமுத்து மார்கண்டுவைக் கொலை செய்யச் சதிசெய்ததாகவும் கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்து வைத்ததாகவும் குற்றம் சாட்டி ஊரெழுவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மராமத்து இலாகா ஓவசியர் செல்லையா என்பவரின்வேலைக்காரன் சுப்பையா மாடசாமி, கார் சாரதி முத்துச்சாமி,செல்லையாவின் மகள் சரஸ்வதி ஆகியோர்மீது சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு கே. செபமாலை வழக்குத் தாக்கல் செய்தார்.

முதலாம் மூன்ரும் எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்துரையும் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆர். விசுவநாதனும் ஆஜராகியிருந்தார்கள்.

பொலிஸ் கான்ஸடபிள்களான பி. சதாசிவம், ஏ. பெரேரா, கே டி. ஐ. குலரத்தின, பி. எஸ. எம். திசநாயக்கா, பி. சி. யோசேப் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மோட்டார் கார் கண்டுபிடிக்கப்பட்டு சீல்பண்ணி மாஜிஸடிரேட் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்பப்படும்வரை இடம்பெற்ற சம்பவங்களை மேற்கூறிய சாட்சிக்காரர் விளக்கினர்.

அந்நிலையில் மேல்விசாரணை இம்மாதம் 18 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## கென்யாட்டா மீது முட்டை வீச்சு

லண்டன், நவ. 8

கென்யா தலைவர் கென்யாட்டா மீது லண்டனில் முட்டை ஒன்று வீசப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

---

# அணு சக்தியால் இயங்கும் ரஷ்ய ஏவுகணை சப்மரீன்கள்
## சமாளிக்க யு. எஸ். ஏற்பாடுகள்

நியூயார்க், நவ. 8

அணுசக்தியால் இயங்கும் ஏவு கணைகள் ஏந்திய சோவியத் சப்மரீன்கள் படை மூலமாக அபாயம் அதிகரிக்கக் கூடும் என்றும், ஆகவே இத்தகைய சப்மரீன்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுபற்றி யு. எஸ். தீவிரமாகப் பரிசீலனை செய்ய ஆரம்பித்திருப்பதாகவும் 'நியூயார்க் டைம்ஸ்' கூறுகிறது.

மேற்கூறிய பத்திரிகையின் ராணுவ நிபுணரான ஸ்ரீ ஹான்ஸன் பால்டுவின் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இந்தப் பரிசீலனையின்பயனுக உலகம் முழுவதும் கடலில் கண்காணிப்புச் செய்வதற்கு யு. எஸ. நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படலாம் என்று அவர் கூறுகிருர்.

ஸ்ரீ பால்டுவின் மேலும் கூறியதாவது:- "தண்ணீருக்குள் காலவரையறையின்றித் தங்கியிருக்கக்கூடிய அணுசக்தியில் இயங்கும் 8 சப்மரீன்களை ரஷ்யா இந்த வருடத்தில் கட்டி முடித்திருப்பதாகவோ அல்லது கட்டி முடித்துக்கொண்டிருப்பதாகவோ கூறப்படுகிறது. மற்றும் மாமூலான சப்மரீன்களிலிருந்து ஏவுகணைகளைச் செலுத்துவதற்கும் ரஷ்யா ஏற்பாடு செய்துள்ளதாம். இந்தச் சப்மரீன்கள் யு. எஸ. ஸின் போலாரிஸ சப்மரீன்களுக்கு இணையாக மாட்டா.

---

## மாமியார்மீது மருமகன் பலாத்காரம்

மாவிட்டபுரம், வியாழன்

மாரிசங்கூடலைச் சேர்ந்த சுப்பையா பொன்னுப்பிள்ளை என்னும் பெண்மணிமேல் பலாத்காரம்பிரயோகித்ததாக அவரது மருமகன் முருகேசு செல்வநாயகம்மேல் குற்றம் சாட்டி சங்கானை பொலிசார் மல்லாகம் நீதிபதி வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்த வழக்கில் எதிரி தான் குற்றவாளியல்லவென்று கூறினர். எனவே எதிரியை ரூ. 500 பிணையில் செல்லும்படியும், டிசம்பர் 12-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

---

## ரூ. 50 அபராதம்

மாவிட்டபுரம், வியாழன்

துன்னலையைச்சேர்ந்த பூதர் சுந்தரம் என்பவரைக் கத்தியால் குத்தி காயம் உண்டுபண்ணியதாகச் சின்னவன் முருகன் என்பவர்மீது குற்றம் சாட்டி சங்கானை பொலிசாரால் மல்லாகம் நீதிபதி வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 50 ரூபா அபராதம் செலுத்தும்படியும் அப்பணத்தை வழக்காளியிடம் கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

---

## 560,000 பேருக்கு க்ஷயரோக பரிசோதனை

கொழும்பு, புதன்

இதுவரை 500,000க்கு மேற்பட்டவர்களுக்கு க்ஷயரோகப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் அதிகமானோர் பள்ளிக்கூட மாணவர்களே.

பரிசோதனை நடத்தியதன் பேரில் 303,600 பேர்களுக்கு க்ஷயரோக நோய் பரவலாம் என அறியப்பட்டுள்ளது.

---

## நாவலப்பிட்டியில் கந்தசஷ்டி விழா

நாவலப்பிட்டி, வியாழன்

நாவலப்பிட்டி கதிரேசன் கோவிலில் 9-ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 14-ம் திகதி செவ்வாய்க்கிழமைவரை கந்தசஷ்டி விழாவுக்கான ஏற்பாடுகள் இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இணுவில் ஸ்ரீ வை. தியாகராஜ சுவாமிகள் இவ்விழாவில் திருப்புகழ் பஜனையும் சங்கீத உபந்நியாசமும் செய்வாரென அறிவிக்கப்படுகிறது. ஆறு தினங்களிலும் முறையே ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ண பிள்ளை, திரு. நா. முத்தையா, திரு. கே. கனகரத்தினம், திரு. எஸ். வி. ஆறுமுகம், திரு. எஸ். பரமசாமி, திரு. கே. சபா ஆனந்தர் ஆகியோர் தலைமை தாங்குவார்கள்.

---

## இராசம்மா—நாகம்மா வழக்கு
### மேல் விசாரணை 11-ம் திகதி

மாவிட்டபுரம், வியாழன்

சங்கானை கிழக்கைச் சேர்ந்த அருணுசலத்தின் மனைவி இராசம்மா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த நாகம்மா என்னும் பெண்ணைத் தடியால அடித்துக் காயம் உண்டுபண்ணியதாகச் சங்கானை பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி தான் சுற்றவாளியெனவே, நீதிபதி விசாரணையை டிசம்பர் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## பசறையில் மக்கள் வங்கி

பதுளை, செவ்வாய்

பசறை பொதுமக்களின் சேமிப்பு, பண மாற்று ஆகியவற்றிற்கும், பெருகிவரும் வர்த்தகத்திற்கு உறுதுணையாகவும் அங்கே ஒரு மக்கள் வங்கிக்கிளையைத் திறக்கமுயற்சி செய்யப்படுகிறது.

---

## தூது கோஷ்டிகள்

ரஷ்ய வர்த்தகத் தூது கோஷ்டி ஒன்று இம்மாதம் பிற்பகுதியில் இலங்கை வரும். இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக தூதுகோஷ்டி பேச்சுவார்த்தை நடத்தும்.

ஃ ஃ ஃ

18 அங்கத்தினர்களடங்கிய ஜப்பானியத் தூதுகோஷ்டி ஒன்று கொழும்பு வந்துள்ளது.

ஃ ஃ ஃ

இலங்கை பௌத்த தூது கோஷ்டி ஒன்று இன்று கம்போடியா புறப்பட்டது.

---

## கென்னடி விருந்து

வாஷிங்டன், நவ. 8

பிரதமர் நேரு உலக வங்கித் தலைவர் திரு. யூஜின் பிளாக்குடன் உணவருந்தினர். அதன் பின் ஜனதிபதி மாளிகையில் திரு. கென்னடி அவருக்கு ஒரு விருந்தளித்துக் கௌரவித்தார்.

---

## கூ. மொ. வி. ஸ்தாபன இரும்புக்கடை

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன இரும்புக்கடை ஒன்றை கொழும்பு ஆர்மர் வீதியில் நாளை வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன திறந்து வைப்பார்.

---

# 8 வருட காலம் நேரு பிரதமராயிருப்பார்
## பிரிட்டிஷ் எம். பி. கருத்து

லண்டன், நவ 8

எதிர்பாராத தேக அசௌக்கியமோ விபத்துக்களோ ஏற்பட்டாலன்றி, இன்னும் 7 அல்லது 8 வருட காலத்துக்கு நேரு பதவியில் நீடிப்பது நிச்சயம் என்று ஆங்கஸ் மாட் என்றகன்சவேர்டிவ் எம். பி. ஒரு பேட்டியில் தெரிவிக்கிருர். அவர் சமீபத்தில் இந்தியா வந்து நேரு, மேனன் முதலிய தலைவர்களையும், தொழிலதிபர்கள் பலரையும் சந்தித்துப் பேசி இருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேட்டி "ஈவினிங் ஸடாண்டர்ட்டு" என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

நேரு இல்லாவிடில் தேசமே சீர்குலைந்து குழப்பம் ஏற்படும் என்றும், அத்தகைய நிலைமை பால் கம்யூனிஸடுகளுக்கு மட்டுமே அனுகூலம் என்றும் சிலர் கொண்டுள்ள கருத்துக்களை அவர் ஏற்கவில்லை. இந்தப்பேட்டியில் அவர் மேலும் கூறுவதாவது:

யுத்தம் ஒன்று வந்தால்தான் இந்தியா ஒரு தேசிய இனம் என்ற உணர்ச்சி ஏற்படும் என்று பம்பாயைச் சேர்ந்த ஒரு பிரபல தொழிலதிபர் என்னிடம் சொன்னர். இறுதி வெற்றி தோல்வியை நிச்சயிக்கக் கூடியதான ஒரு சண்டையை மேற்கொள்ளும் நிர்ப்பந்தத்தை சீன ஏற்படுத்தினலொழிய, ஜப்பானுக்கோ பிரிட்டனுக்கோ இருப்பது போன்ற தேசிய இனஉணர்ச்சி ஏற்படாது என்பதைக் குறிக்கவே அவர் இவ்வாறு சொன்னர் என்று நினைக்கிறேன்.

நேரு இல்லாமல் போனல் காங்கிரஸில் பிளவு ஏற்படக்கூடும். காங்கிரஸிலுள்ள வலது சாரியினரும் நடு மையவாதிகளும் ஸ்ரீ மொரார்ஜி தலைமையில் ஒன்று கூடி, மேனன் அல்லது வேறு யார் தலைமையிலாவது இயங்கும் இடதுசாரிகளை ஓங்கவொட்டாமல் செய்யக்கூடும்.

மிகத் திறமையான முதன் மந்திரிகளுள் ஒருவரான ஸ்ரீ சாவனை போன்றவர்கள், அகில இந்திய தலைமையை வகிக்கும் நிலைமையும் ஏற்படலாம்.

மத்திய சர்க்காரில் உள்ள மிகத் திறமை வாய்ந்த அதிகாரிகள் இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை ஊட்டுகிறவர்களாக இருக்கிருர்கள். இவர்களாலேயே இந்தியாவைக் காப்பாற்ற முடியாமல் போகும்பட்சத்தில் இந்தியாவுக்கு எதிர்காலமே இல்லை. ஆனல், மேலை நாடுகளின் அனுதாபமும், உதவியும் கிடைத்தால், அவர்களால் இந்தியாவைக் காப்பாற்ற முடியும் என்றே நம்புகிறேன்.

---

## ஜொலிஸ்டார் கிளப் வெற்றி

சுன்னுகம், பதன்

சுன்னுகம் ஜொலிஸ்டார் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் சுன்னுகம் சென். அன்ரனிஸ் 'பி'பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஜொலிஸ்டார் கிளப் சென். அன்ரனிஸ் கோஷ்டியை 1-0 கோல்களால் தோற்கடித்தது. மத்தியஸதராக கு. செபமாலை கடைமையாற்றினர்.

---


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்றீஸ் லிமிட்.
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்

J.D. 3

# சுவாமி மலைக்கு இலவச மின்சார விநியோகம்

## அரசாங்கத்துக்கு மகஜர்

திருக்கோணமலை, செவ்வாய்

"சுவாமிமலை ஓர் புனிததலம். பிரிட்டிஷார் கையில் இவ்வாலயம் இருக்கும் பொழுது அக்கோயிலுக்கு இலவச மின்சார வசதிகள் அளித்துவந்தனர். அவர்கள் கையிலிருந்து இலங்கை அரசின் கைக்கு இத்தளங்கள் மாற்றப்பட்டநாள் தொடக்கம் இலவச மின்சார வசதியை நிறுத்தியதுடன் உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்குப் பணம் செலுத்தும்படி வற்புறுத்துகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கவிஷயம். கலாச்சார அமைச்சு இவ்விஷயம் பற்றித்தெரிந்தும் தெரியாததைப்போல் இருப்பது மிகவும் கவலைக்குரியது. சிவநெறிக்கும் கலாசாரத்திற்கும் முக்கியம் கொடுக்கும் வகையில் மீண்டும் இலவச மின்சாரவசதியை இப்புனித தலமான கோணேசராலயத்திற்கு அளித்தல் வேண்டும் எனத் திருக்கோணமலைவரியிறுப்பாளர்கள் சங்கச் செயலாளர் திரு. ஆ. லோகிதராசா அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் கூறியுள்ளார்.

## கியூவில் நிற்காததால் எம். பி. க்கு டிக்கட் இல்லை

கொழும்பு, புதன்

கலவான எம். பி. கியூவில் நிற்காததால் கண்டக்டர் டிக்கட் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

இரத்தினபுரியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த எம். பி. கொழும்புக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறுவதற்கு முயற்சிசெய்த போதே கண்டக்டர் அவர் கியூவில் நின்று வராததால் அவருக்கு டிக்கட் கொடுக்க மறுத்தார்.

இவ்விதம் கண்டக்டர் நடந்து கொண்டதை அங்கு கியூவில் நின்று கொண்டிருந்த பிரயாணிகள் பாராட்டிப் பேசி இவ்வித கஷ்டத்தை எம். பி.க்கள் அனுபவித்தால் தான் பொது மக்களின் கஷ்டத்தை அவர்கள் உணருவார்கள் எனக் கூறினர்களாம்.

## நாவலப்பிட்டியில் அம்மைப்பால் கட்டும் சேவை

நாவலப்பிட்டி, செவ்வாய்

நாவலப்பிட்டி நகரசபைக் கந்தோரில் அம்மைப்பால் கட்டும் வேலையில் சுகாதார அதிகாரிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். பெருந்தொகையான மக்கள் இச்சேவையைப் பயன்படுத்தி அம்மைப்பால் கட்டிக் கொள்கின்றனர்.

நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரிகள் நாவலப்பிட்டி மாவட்டத்திலுள்ள 6500 பேருக்கு நெருப்புக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதெனவும் முடிவு செய்துள்ளனர். இப்பகுதியில் நெருப்புக் காய்ச்சல் பரவி வருவதைத் தொடர்ந்து தடுப்பூசி போடும் வேலைகள் விரைவில் தொடங்கப்படுமெனத் தெரியவருகிறது.

# 'நூல்நிலையங்கள் மறுமலர்ச்சி அடைகின்றன'

## 5வது வருடாந்த சங்க கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"நூல்நிலையங்களைபொறுத்தவரையில் இப்பொழுது இலங்கையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஒரு தேசிய சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் மாநகரசபைகளும் நூல்நிலையங்களை வளர்க்க முயற்சிஎடுத்து வருகின்றன."

இவ்வாறு திரு. கே. செல்லையா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஐந்தாவது வருடாந்த நூல்நிலைய சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமது இயக்கத்தின் சாதனை மகத்தானது. அது நமது சமுகத்துக்கு மேலும் தொண்டாற்றும் என்பது எனது நம்பிக்கை.

திரு. ஆர். எஸ். தம்பையா பேசுகையில் யாழ்ப்பாணத்தில் நூல்நிலையப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

காரியதரிசி திரு. கே. மாணிக்கவாசகர் தமது அறிக்கையில் யாழ்ப்பாண நூல்நிலைய சங்கம் ஆற்றிய சேவைபற்றித் தெரிவித்தார்.

கீழ்க்கண்டவர்கள் உத்தியோகத்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்: திரு. கே. செல்லையா, காரியதரிசி: திரு. கே. மாணிக்கவாசகர், திருவாளர்கள் ஆர். எஸ். எம். தம்பையா, எஸ். ஜே. மாணிக்கம், எம். கந்தையா ஆகியோரைக் கொண்ட கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## நேருவுக்கு மாநகரசபையின் பாராட்டு

குருநாக்கல், புதன்

இந்திய ரயில் விபத்தில் மரணமான இலங்கையரின் சடலங்களை இந்தியாவிலிருந்து விசேஷ விமானங்கள் மூலம் இங்கு அனுப்புவதற்கு உடன் நடவடிக்கை எடுத்தது குறித்து குருநாகல் மநகரசபை தனது மாதாந்தக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் நேருவுக்கு நன்றி தெரிவித்தது.

## நீர்வேலியில் கந்தசஷ்டி

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவம் புதன்கிழமை கொடியேற்று விழாவுடன் ஆரம்பமாகியுள்ளது. ஆறு தினங்களும் உற்சவம். விசேஷ பூசை நடைபெறும். ஆறும் நாள் மாலை சூரசங்காரமும், ஏழாம் நாள் தீர்த்த உற்சவமும், எட்டாம் நாள் திருக்கலியாண உற்சவத்துடனும் முடிவுறும். உற்சவ காலத்தில் புராணப் படலமும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## அடித்துக் காயம் ஏற்படுத்தியதாகக் குற்றச் சாட்டு

### ரூ. 500 பிணையில் அனுமதி

மாவிட்டபுரம், வியாழன்

பெரியவிளானைச் சேர்ந்த சுப்பிரமணியம் மோகன செல்வம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த வல்லிபுரம் நாகலிங்கம் என்பவரை இரும்பால் அடித்து படுகாயம் விளைவித்ததாகவும், நாகலிங்கத்தை தாக்குவதற்கு சுப்பிரமணியம் மோகன செல்வத்திற்கு உதவி செய்ததாகச் செல்லப்பாசுப்பிரமணியம் என்பவர் மேலும் சங்கானை பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இரு எதிரிகளையும் தலா ரூபா 500 பிணையில் செல்லும்படியும் டிசம்பர் 18-ந் திகதி கோர்ட்டிற்கு வரும்படியும் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் உத்தரவிட்டார்.

# நேரு விஜயத்தினல் ஏற்படும் பலன்

## அமெரிக்காவில் நிலவும் கருத்துக்கள்

நியூயார்க், நவ. 8

ஸ்ரீநேரு விஜயத்துக்குப் பின் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி ஸ்ரீமதி கென்னடி இந்தியா, பாகிஸ்தானில் சுற்றுப் பிரயாணம் செய்வார் என்ற அறிவிப்பு, நேரு-கென்னடியின் சம்பாஷணையின் பலனைக இரு நாடுகளிடையே நேசத்தைப் பலப்படுத்தும் என்ற நம்பிக்கையை அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் அமெரிக்காவிடம் உள்ள மதிப்பு, நடுநிலைமை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவுக்குள்ள முக்கியத்துவம் ஆகிய விஷயங்களுக்கு இப்போது முக்கியத்துவட் கொடுக்கப்படுகிறது.

பெர்லின், லாவோஸ் பொருளாதார உதவி மற்றும் பல்வேறு விஷயங்கள் பற்றி இரு தேசத் தலைவர்களும் பேசுவார்கள்.

ஸ்ரீகென்னடி தமக்குள்ள சில தர்மசங்கடங்களை ஸ்ரீநேருவிடம் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவில் ஜனாதிபதி சொன்னது 'தான் இறுதியானது என்ற நிலைமையில்லை. செல்வாக்கு கோஷ்டிகளுக்கிடையில் ஒரு மத்தியஸ்தராக அவர் செயலாற்ற வேண்டியிருக்கிறது. உதாரணமாக ரஷ்ய அணுக் குண்டு சோதனைகள் நடத்தியிருப்பதால் அமெரிக்காவும் காற்று மண்டலத்தில் சோதனைகள் நடத்த வேண்டும். இல்லையெனில் இத்துறையில் பின்தங்க நேரிடும் என்று ராணுவத்தினரும் விஞ்ஞானிகளும் ஆலோசனை கூறுவதாக வைத்துக் கொள்ளலாம். அப்போது தனது நிலைமையை யு. எஸ். ஸி.டம் நேசமாக உள்ள நாடுகளின் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். தென்கிழக்கு ஆசியா பற்றி இம்மாதிரி தர்மசங்கடமான நிலைமைகள் அவருக்கு ஏட்பட்டிருக்கின்றன. தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற அமெரிக்கா தயாராக இருக்கிறது. ஆனல் மேலும் நிறைய பிரதேசங்களில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்படும்படி விட்டுவிட்டார்' என்று குற்றம் சாட்டப்படும் நிலைமையில் தன்னை வைத்துக் கொள்ள எந்த அமெக்க ஜனதிபதியும் விரும்பமாட்டார்.

பெர்லின் பிரச்சினையில் உள்ள தர்மசங்கடம் இது தான்: அப்பிரச்சினையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று ஜனதிபதி சொன்னல் அவர் வழ வழரக் கொள்கையைப் பின்பற்றுகிறார் என்றும் உறுதியாக இருந்தால் ஆத்திரமூட்டும் வகையில் நடக்கிறார் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. இறு ஒருபுறமிருக்க ராணுவ சர்வாதிகார சர்க்கார்களுடனும், காலனி ஆதிக்க சர்க்கார்களுடனும்சேர்ந்து கொள்ளலாம் என சில அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். இந்த அம்சத்தில் நேரு நிறைய பேசக்கூடும். ஒரு அரசியல் விமர்சகர் கூறியுள்ள பின்வரும் வார்த்தைகள் நேரு விஜயத்தைப் பற்றி, சர்க்கார் வட்டாரத்திலும், பொதுமக்களிடையேயும் நிலவும் அபிப்பிராயத்தை சுருக்கமாக எடுத்துரைக்கிறது என்று கூறலாம். இதுவரை அமெரிக்க ஜனதிபதி மேற்கொண்டபலசந்திப்புகளில் இந்த சந்திப்பே மிக முக்கியமானது என கருதப்படுகிறது. சீன சர்வாதிகார ஆட்சி முறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கையில், ஸ்ரீநேருவின் தலைமையில் இந்தியா சுதந்திரப் பாதையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

# சமசமாஜ வாலிபர் பாதை அமைத்தனர்

## தீபாவளித் திருநாளில்செய்தபணி

உடுப்பிட்டி, புதன்

தீபாவளியன்று வதிரி சமசமாஜ இளைஞர் நூறுபேரும் இதர பொதுமக்களும் ஒன்று திரண்டு அதிகாலை 5 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை வேலைசெய்து வதிரி வட்டாரத்தில் 600 அடிநீளமும், 10 அடி அகலமும் கொண்ட பாதையொன்றை அமைத்தனர். மருதவாணன் என்னும் இளைஞர் தமது நிலத்தில் பெரும்பகுதியை இப்பாதைக்கென நன்கொடையாக அளித்ததால் இது "மருதவாணன் ஒழுங்கை" எனப் பெயரிடப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்டைவேலிக் கிராமச் சங்கத் தலைவர் திரு. இ. சச்சிதானந்தம் மேற்படி ஒழுங்கையைப் பார்வையிட்டு, வாலிபரின் சேவையைப் பாராட்டியதுடன், அவ்வொழுங்கையை கிராமசபையிற் பதிவதாகவும் கூறினர்.

வடமராட்சி சமசமாஜக் கட்சிக் காரியதரிசி டாக்டர் எஸ். மாசிலாமணியும் இளைஞரின் சேவையுணர்ச்சியைப் பாராட்டினர்.

## வைத்திய நிபுணர்களின் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, புதன்

இதுவரை ஒரு தொழில் இயக்கமாக இருந்து வந்த அரசாங்க வைத்திய நிபுணர்கள் சங்கம் தொழிற் சங்கமாக மாறுவதற்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

## கத்தியால் குத்திகாயம் உண்டுபண்ணியதாக வழக்கு

மாவிட்டபுரம், வியாழன்

ஈவினையைச் சேர்ந்த செல்லன் சிவக்கொழுந்து என்னும் பெண்மணியைக் கத்தியால் குத்தி காயம் உண்டு பண்ணியதாக அதே ஊரைச் சேர்ந்த நன்னியன் அருளன் என்பவர் மேல் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாகமல் செய்யப்பட்டவழக்கில் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லும்படியும் இம்மாதம் 14-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

## பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி ரூமன் கத்தோலிக்க பாடசாலையின் பெற்ருர்-ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 9-ம் திகதி வியாழன் மாலை 6-மணிக்குக் கூடும். பாடசாலை எடுக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட பிரச்சினைகள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவிருக்கின்றனவெனத் தெரிகிறது.

இது சம்பந்தமாக இச் சங்கம் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கும் கூட்டத்தில் ஆராயும்.

## அப்பீல் மனு நிராகரிப்பு

### 6 மாதச் சிறை ஊர்ஜிதம்

தெல்லிப்பழை, வியாழன்

பலாலியைச் சேர்ந்த கந்தையா வேலுப்பிள்ளை என்வர் புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த நாகமுத்து தம்பிராசா என்பவருக்குச் சொந்தமான 65 ரூபாய் பெறுமதியான இரண்டு மறி ஆடுகளைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டவழக்கில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஆறுமாதக் கடூழிய சிறைத் தண்டனை விதித்தார்.

இத் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரி சுப்ரீம் கோர்டுக்கு அப்பீல் செய்தார். இந்த அப்பீல் மனுவை நீதியரசர் திரு. என். ஜி. பெர்னண்டோ பரிசீலனை செய்து மனுவை நிராகரித்து மல்லாகம் நீதிபதியின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தார்.

## ரோட்டரிகிளப் தீபாவளி வெகுமதி

யாழ்ப்பாணம், புதன்

ரோட்டரி சமுகசேவைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண ரோட்டரி கிளைச் சங்கத் தலைவர் திரு. வி. சத்தியநாதன் ரோட்டரி சமுகசேவைத் தலைவர் திரு. டி. தெளவத்ராமுடன் கைதடி முதியோர் நிலையத்தில் 204 பேருக்கு தீபாவளி வெகுமதிகள் வழங்கினர்.

சென்ற மாதம் ரோட்டரி கிளப், இளைஞர் சபையினல் நடத்தப்படும் வர்த்தகப்பாடசாலைக்கு ஒரு டிராக்டரை வெகுமதியாகக் கொடுத்தது.

## ரூ. 500 பிணையில் அனுமதி

மாவிட்டபுரம், வியாழன்

பெரிய விழானைச் சேர்ந்த முருகேசு செல்வநாயகம் என்பவர் தனது மனைவியான தவமணியை அவரின் தலையில் மண்வெட்டியால் அடித்து படுகாயம் விளைவித்ததாக சங்கானை பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லும்படியும் டிசம்பர் மாதம் 18ந்திகதி கோர்ட்டிற்கு வரும்படியும் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் உத்தரவிட்டார்.

## மணி வாக்கு

"தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும் அவற்றை விரைவில் திருத்திக் கொள்வதற்கான தைரியமும் மிகவும் முக்கியமான விஷயங்களாகும்."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 25 உ (10-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## அமெரிக்காவில் நேருஜி

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமர் நேருவை ஜனதிபதி கென்னடி ராஜோபசாரத்துடனே வரவேற்று, "ஆப்ரகாம் லிங்கன், பிராங்கிளின் ரூஸ்வெல்ட் இவர்களைப் போல நேருவும் உலகத்தின் மாபெரும் தலைவராவார்" என்று மனமாரப் பாராட்டியுள்ளார். ஓர் அமெரிக்கர் தெரிவிக்கக்கூடிய மிகப் பெரிய பாராட்டு இது. சில அமெரிக்கப் பத்திரிகைகள், நேருஜியையும், அவரது ரஷ்ய கொள்கையையும் மிக மனக்கசப்புடனே ஆத்திரத்துடன் தாக்கும் இச் சமயத்தில், ஜனதிபதி கென்னடி, அவரை இப்படி மிகமேலாகப் பாராட்டியுள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் பிரதமர் நேரு ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். உலகத்தின் பல முக்கிய பிரச்சினைகளைப் பற்றி ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவுடன் மனம்விட்டுப் பேசினர். ஐந்து கோடி டன் சக்தியுள்ள ஜலஜ குண்டை ரஷ்யா வெடித்தது நேருஜிக்குப் பிடிக்காவிடினும், ரஷ்யா மீது அவருக்கு மனக்கசப்போ அன்றி வெறுப்போ இல்லை. சில அமெரிக்கப் பத்திரிகைகள் கேட்டது போல், ரஷ்யாவையும் குருஷ்சேவையும் அவர் பலமாகக் கண்டித்திருப்பின், அதனல் அவர் ரஷ்யாவின் நட்பை இழப்பதைத் தவிர லாபமெதுவும் ஏற்பட்டிருக்க முடியாது. ரஷ்யா தன் மனம் போனபடி காரியம் செய்தே இருக்கும்.

ஆனல் அரசியல் ஞானியும் தீர்க்கதரிசியுமான பிரதமர் நேரு, மகாத்மா காந்தியிடம் பெற்ற பயிற்சியின் காரணமாக யாரையும் விரோதித்துக் கொள்ளவில்லை. அதே சமயம் தமது உயர்ந்த கொள்கையையும் விட்டுக் கொடுக்கவில்லை. இந்த உத்தமமான மனப்போக்கு காரணமாக உலக சமாதானத்தைப் பாதுகாக்கக் கூடிய ஒரே ஒரு சக்தியாக அவர் இன்றைய உலகில் பொலிகின்ருர். ஜனதிபதி கென்னடிக்கும், ரஷ்ய பிரதமர் குருஷ்சேவுக்கும் வேற்றுமைகளைக் குறைத்து ஒற்றுமையை பலப்படுத்தி ஒரு நட்புப் பாலம் அமைக்கும் பெருங் கைங்கரியத்தை நேருஜி இப்போது செய்கின்ருர்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்க நேருவின் மாஸ்கோ, வாஷிங்டன் விஜயங்கள் எவ்வளவு தூரம் உதவுமென்பதை இச் சமயம் திட்டமாகக் கூறுவதற்கில்லை. என்ருலும் அமெரிக்கா, ரஷ்யா இவ்விரு போட்டி வல்லரசுகளின் மதிப்பையும், நம்பிக்கையையும் நேருஜி மற்றயாரையும்விட வெகுவாகப் பெற்றுள்ளதால், இருவரிடையிலும் சமரசம் ஏற்படுத்தி, உலக சமாதானத்தைப் பாதுகாக்கக் கூடிய மேலான தூதராக அவர் விளங்குகிருர். உலகத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சமயத்தில், பல பிரச்சினைகளையும் யுத்தத்தின் மூலமன்றி பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வதே விவேகமாகுமென்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இப்போது அமெரிக்காவும் ரஷ்யாவும் நேருஜியின் மூலம் தங்கள் வேற்றுமைகளை வெகுவாகத் தீர்த்துக்கொண்டு உலக சமாதானத்தைப் பாதுகாக்க முன்வருமா என்றே உலக மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்ருர்கள்.

# ஐ.நா. பொதுச்செயலாளர் யூதாண்ட்

## உலகத் தலைவர்களின் நண்பன்

ஐ. நா. வின் தற்காலிக காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. யூதாண்ட் சிறந்த பல குணங்கள் கொண்டவராவர். கம்யூனிஸ்ட் நாடுகள் ஏகமனதாக அவரைக் காரியதரிசியாக ஏற்றுக்கொண்டதிலிருந்து, அவரது சிறப்பு நன்கு விளங்கும்.

பர்மாவைச் சேர்ந்த 52 வயதான திரு. யூதாண்ட் நடுநிலைமைக் கொள்கையில் தீவிர நம்பிக்கை கொண்டவர்.

"சமாதானப் போரிலிருந்து பின்வாங்கும் மந்தமான நடுநிலைமையினல், சமாதானத்தை ஏற்படுத்த முடியாது" என்று ஒரு முறை ஐ. நா. பொதுச் சபையில் கூறினர்.

பர்மா ஐ. நா. கோஷ்டியின் தலைவராக 1957லிருந்து அவர் இருந்து வருகிருர். அப்பொழுதிலிருந்து தாம் ஒரு உண்மையான நடுநிலைமையாளர் என்பதைச் செயல் மூலம் நிரூபித்திருக்கிருர்.

ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்ட போது, அவர் ரஷ்யாவின் போக்கைக் கண்டித்தார். கியூபா பற்றிய அமெரிக்காவின் கொள்கையையும், அல்ஜீரியா பற்றிய பிரெஞ்சின் போக்கையும் அவர் கண்டித்தார்.

ஐ. நா.வைப் பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் அவர் எதிர்த்து நிற்கத் தவறியதில்லை.

ஹமர்ஷீல்டுக்குப் பதில் காரியதரிசி பதவிக்கு மூவர் கொண்ட குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த ஆண்டு சோவியத் பிரதமர் குருஷேவ் கூறினர். ஐ. நா. காரியதரிசியின் அதிகாரங்களைக் குறைக்கக் கூடிய எந்தத் திட்டத்தையும் தாம் எதிர்ப்பதாக, அப்பொழுது ஐ. நா. சபையில் திரு. யூதாண்ட் தெரிவித்தார்.

ஐ. நா. சபை மிகவும் சக்தி வாய்ந்ததாக செயல்பட வேண்டுமென்பதில், அவர் தீவிரமான எண்ணங்கொண்டவராவார். காலஞ்சென்ற ஹமர்ஷீல்டிடம் அவர் அதிக பற்று கொண்டிருந்தார்.

புத்த மதத்தைச் சேர்ந்த யூதாண்ட் உணர்ச்சி வயப்பட மாட்டார். உணர்ச்சிகள் சமநிலையிலேயே இருக்க வேண்டுமென்ற கொள்கை கொண்டவராவார்.

ஐ. நா. காரியதரிசி பதவி தமக்கு அளிக்கப்பட்டபோது அப்பொழுது மனதில் எழுந்த உணர்ச்சிகளைத் தம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று என்று அவரே கூறியிருக்கிருர்.

ரங்கூனுக்கு அருகே உள்ள பான்டானு என்ற ஊரில் பிறந்த திரு. யூதாண்ட் முதலில் உள்ளூர் பள்ளிக்கூடத்திலும், பிறகு ரங்கூன் பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்ருர்.

கல்லூரியில் படித்த நேரத்தில்தான், இப்பொழுது பர்மாவின் பிரதமராக உள்ள திரு. யூ—நூக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது. அதன் பிறகு அவர்கள் இருவரும் பான்டானு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு பிறகு, திரு. யூதாண்ட் அரசியலில் ஈடுபட்டார். பர்மா விடுதலை அடைந்த பிறகு அரசாங்க அச்சக தலைவராகப் பதவி ஏற்ருர்.

பர்மாவின் பிரதமரோடு சர்வதேச மாநாடுகளில் அவர் பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர். அதன் மூலம் குருஷேவ், மா—சே—துங் போன்ற உலகத் தலைவர்களோடு அவருக்குப் பழக்கமேற்பட்டது.

பர்மாவின் ஐ. நா. கோஷ்டியில் ஓர் உறுப்பினராக 1952ல் அவர் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு 5 ஆண்டுகள் கழித்து அக்கோஷ்டிக்கு அவர் தலைவரானர்

அவருக்கு ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளனர்.

## வாழ்க்கைக் காலம் 70 வருடங்களாக உயர்வு

### நோய்களைத் தடுப்பதில் வெற்றி

டாட், நவ 8

ஜெர்மனியில் பிறப்பவர்கள் 70 வருடகாலம் உயிர் வாழ முடியும் என்பது இப்போது தெரிய வருகிறது. 1875-ல் வாழ்க்கைக் காலம் 37 வருடங்களாகத்தான் இருந்ததாம். சமீபகாலமாக வைத்தியத் துறையில் ஏற்பட்டுள்ள புது கண்டுபிடிப்புகள், மருத்துவத் துறையில் அறிவு அபிவிருத்தி நோய்களைக் குணப்படுத்துவதுடன், வராமல் தடுக்கவும் வழிவகைகளைச் செய்துவிட்டன.

1871 முதல் 1874 வரை ஜெர்மனியில் அம்மைநோய் அடிக்கடி ஏற்படலாயிற்று. 1,75,000 பேர் பாதிக்கப்பட்டதுடன் 65,000 பேர் மாண்டனர். இப்போதுபிறந்த குழந்தைகளுக்கு சில மாதங்களுக்குள் அம்மை குத்தப்படுவதால் இந்த நோயினல் ஏற்பட்ட மரண ஆபத்து தவிர்க்கப்பட்டுவிட்டது. இதே மாதிரி குழந்தைகள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் பல நோய்கள் இப்போது தடுக்கப்பட்டுவிட்டன. 'டிப்தீரியா' நோய் 85 சதவிகிதமும், 'ஸ்கார்லெட் ஜுரம்' என்கிறநோய் 76 சதவிகிதமும். 'டைபாயிடு' 57 சதவிகிதமும் குறைக்கப்பட்டுவிட்டன. சில வருடங்களுக்கு முன் "இந்நோய்க்கு மருந்தில்லை" என்று கைவிடப்பட்ட வியாதிகள் இன்று குணப்படுத்தப்பட்டுவருகின்றன.

## மீன்பிடித் தொழில் விருத்திக்கு

### உலக வங்கி உதவி

கொழும்பு, வியாழன்

மீன்பிடித்தொழிலை அபிவிருத்திசெய்துகொள்வதற்குஉலக வங்கியிடமிருந்து இலங்கை பெருந்தொகையான பண உதவியைப்பெற இருப்பதாகத் தெரிகிறது. எவ்வளவுதொகையான பணத்தை உலக வங்கி உதவ இருக்கிறது என்றும் அது எவ்வாறு உபயோகப்படுத்தப்படும் என்பது பற்றியும் ஆராய்வதற்கு உலக வங்கியின் வல்லுனர்குழு ஒன்று வெகு விரைவில் இங்கு வரவிருக்கிறது.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம்செய்த உலக வங்கி வல்லுனர்குழு இலங்கையில் மீன்பிடித்தொழிலை ஒருபெரும் கைத்தொழிலாக்கு மளவுக்கு உதவிசெய்யலாம் எனச் சிபார்சுசெய்துள்ளது. விரைவில் பயனளிக்கக்கூடிய முறையில் மீன்பிடிக்கைத் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் எனவும் அக்குழு சிபார்சுசெய்துள்ளது.

உலகவங்கி உதலவிருக்கும் பணத்தில் மீன்பிடிக்கும் பெருவள்ளங்களும், மீன்பிடித் தோணிகளும் வாங்கப்படவிருக்கின்றன. அத்தோடு மீன்பிடித் துறைமுகங்களும் குளிர்சாதன வசதிகளும் அமைப்பதற்கு உலக வங்கி உதவும் பணம் உபயோகிக்கப்படும். இலங்கை மீன்பிடிக் கரையோரங்களின் தன்மைகளை ஆராய்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

—

## காவலாளருக்கு மழை அங்கிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாநகரசபை காவலாளர்கள் மூவருக்கும் ஒவ்வோர் உயர்தர மழை அங்கிகள் கொடுப்பதென மாநகரசபை நிதிக்குழு பார்சு செய்துள்ளது.

## குழந்தைகள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. ஆகவே பெற்ருேர்கள் நல்ல தூய்மை பொருந்திய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். ஆகவே ஆசிரியர்களிலும் பார்க்க பெற்ருேர்களின் கடமை மிகமுக்கியமாகிறது. மாணவ மாணவிகளின் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளை நன்முறையில் படிப்பிக்கவெனஎண்ணி பெரிய பட்டினங்களிலுள்ள பாடசாலைக்குக் கொண்டு செல்கின்றனர். தேசியக் கல்வித்திட்டத்தின் கீழ் எங்கள் அரசாங்கம் கிராமப்புற பாடசாலைகளை எல்லா வசதிகள் பொருந்திய பாடசாலைகளாக விரிவடையச் செய்கின்றது. இதன்மூலம் பெற்ருேர்கள் பெரிய பட்டினங்களிலுள்ள பாடசாலைகளை நாட வேண்டிய அவசியமில்லை."

உதவிமந்திரி கருணரத்தின வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி கூறுகையில் குறிப்பிட்டதாவது:-

"வேலையில்லாத்திண்டாட்டம் பெருகுவதற்குக் காரணம் புத்தகப்படிப்புடன் வாழும் மக்கள்தான் காரணமே ஒழிய வேலை வசதிகள் கிடையாததால் அல்ல. தொழிற் கல்வி பெற்றிருப்பவர்கள் நாட்டில் இருப்பின் இவ்வேலையில்லாத் திண்டாட்டம் இருந்திருக்காது. இலங்கையின் பிரதமர் ஓர் பெண்மணி தாய்குலத்தின் பெருமையை நிலைநாட்டவந்த அப்பெண்மணி அமைத்த அரசாங்கத்தின் கீழ் இந் நாட்டில் வதியும் மக்களனைவரும் ஒரே குழந்தைகள். இனமொழி மத வேறுபாடு கிடையாது. 1962-ம் ஆண்டு பெப்ரவரியில் இவ்வரசாங்கம் விழுமென்று கனவுகாண்பவர்கள் காணட்டும். எமது திட்டமிடப்பட்ட நன்நோக்கங்கள் கொண்ட திட்டங்களை அமுல் நடத்தியேதீருவோம். நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் கொண்டுவரும் சட்டங்களினல் ஒருசிலர் கஷ்டமடையத்தான் நேரிடும். இது தவிர்க்க முடியாதது."

"இந் நகரத்தின்கண் வாழும் தமிழ், சிங்கள், முஸ்லிம்கள் இணைந்து ஒற்றுமையாய் வாழ்வதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்றும் திரு. கருணரத்தின கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சென்றிருந்த நண்பரொருவர். இரண்டுநாள் அங்கு இருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வெளியேறி, 'நர்ஸிங்ஹோமில்' சேர்ந்திருக்கிருர்.

"ஞாயிற்றுக்கிழமை ஜெனரல் ஆஸ்பத்திரியில் குடி தண்ணீர் கொடுக்கவும் ஆளில்லை. யாரோ ஒருவர் தேக உஷ்ணத்தைப் பார்த்துக் குறித்துக் கொண்டுசென்ருர். பின்னர் கேள்விமுறை கிடையாது. சிங்களம் தெரிந்தாலே ஏதாவது கேட்டுப்பெறலாம். சிங்களம் தெரியாதவர்களை அங்கு சிப்பந்திகள் கவனிப்பதில்லை. திடீர் விபத்துக்குள்ளானவர்கள், இரத்தம் வடியவந்தும், வாந்தி எடுத்துக்கொண்டு இருந்தும், சிப்பந்திகள் மிக அலட்சியமாகவே சற்றும் கவனிக்காமலிருக்கின்ருர்கள்... ." என்று நண்பர் கதை கதையாகச் சொன்னர்.

ஆஸ்பத்திரிசிப்பந்திகளுக்குத் தமிழ் தெரியாதா? . டாக்டர்களுக்கே சிங்களம், தமிழ் இரண்டும் தெரிந்திருக்கவேண்டுமென்று நிபந்தனையுண்டு. அப்படி இருக்க, பொதுமக்கள் பேசும் இருமொழிகளும், ஆஸ்பத்திரி சிப்பந்திகள் அனைவருக்கும் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டாமா? தமிழ் தெரிந்திருந்தும் இப்படி அலட்சியமாகவுள்ளனரா? சிப்பந்திகளின் தொழிற்சங்கங்கள், உரிமைகளைப்பற்றிக் கவனிக்கின்றனவேயன்றி, கடமைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. சுகாதார மந்திரியும், மேலதிகாரிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் பொதுமக்களின் நன்மையைக்கருதி, இவ்விஷயமாகச் சற்றே கவனம் செலுத்தி, இவ்வூழல்களை நீக்க, தக்க முயற்சி எடுக்க வேண்டும். பார்லிமெண்டில் இவ் விஷயமாக யாராவது எம். பி. க்கள் கேள்வி கேட்டு, மந்திரியின் கவனத்தைத்திருப்பி, ஊழலை நீக்க முன்வருவார்களா?

* * *

கொழும்பு ஸாகிராக்கல்லூரி சென்ற சில வருட காலமாக வெற்றிகரமாக முன்னேறிவந்தது. அதை ஒரு பல்கலைக்கழகம் ஆக்குவதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

சென்ற ஜுலைமாதம், அங்கு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுபடவில்லை என்ற காரணத்தால், அக்கல்லூரியை அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டது. அக்கல்லூரியை அரசாங்கம், திருப்பிக்கொடுத்து விடவேண்டுமென்று கேட்டு, ஸாகிராக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஸாகிராவின் மற்ருேர் பழைய மாணவர் சங்கம், அரசாங்கம் இக்கல்லூரிப் பொறுப்பை ஏற்றதைவரவேற்றும் ஆதரித்தும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஒரு முறை அரசாங்கம் ஒரு கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டால், பின்னர் அதைத் திருப்பிக்கொடுக்கமுடியவதென்று சட்டமாம்.

## யாழ்ப்பாண நூல்......

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதையும் நீங்கள் அறிவீர்கள். இக்கட்டடத்தை விரைவில் கட்டி நிறைவேற்றவும், இதற்கு வேண்டிய தளபாடங்கள், நூல்கள் முதலியவற்றை வாங்கவும் மேலதிக பணம் தேவையாகவிருக்கிறது. ஆகவே, நூல் நிலைய நிர்வாக சபையார் உங்கள் உதவியை வேண்டுகின்றனர்.

இதன் நிதிக்காக நாங்கள் நடாத்தும் 'கொடித் தினத்தில்' தங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரவும்.

# ஐ. நா. பாதுகாப்புச்சபை திங்கட்கிழமை கூடுகிறது

## காங்கோ பற்றி விவாதிக்கும்

நியுயோர்க், நவ. 9

காங்கோ நிலைமைபற்றி விவாதிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபை திங்கட்கிழமை கூடுகிறது.

காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடௌலா நேற்று லியப்போல்ட்வில்லியிலுள்ள இந்தியத் தூதரகப் பொறுப்பதிகாரியைச்சந்தித்து பாரதப் பிரதமர் நேருவுக்கு அனுப்புவதற்கான கடிதம் ஒன்றை அவரிடம் கொடுத்தார்.

காங்கோவிலுள்ள ஐ. நா. அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரம் வழங்குவதற்கு முயற்சி செய்யுமாறு ஸ்ரீ நேருவை திரு. அடௌலா தமது கடிதத்தில் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

# ரஷ்யாவின் சண்டித்தனம் நீடிக்கும்

## ஸ்ரீ செஸ்டர் பவுல்ஸ் கருத்து

வாஷிங்டன், நவ. 8

"யுத்தம் வந்தே தீரும் என்பதில்லை" என்று யு. எஸ். வெளி நாட்டு விவகார உதவி மந்திரி ஸ்ரீ செஸ்டர் பவுல்ஸ் இன்று கூறினர்.

ஸ்ரீ பவுல்ஸ மேலும் கூறியதாவது:-

கம்யூனிஸடுகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்விகள் காரணமாகவும், ரஷ்யாவுக்கும், சீனவுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ள காரணமாகவும், ரஷ்யாவுடன் பேரம் நடத்துவது மிகவும் கடினமாகிவிடும்; அபாயகரமாகவும் இருக்கும்.

முதியோர் கல்விபற்றி இங்கு நிகழ்த்திய உரையிலேயே ஸ்ரீ பவுல்ஸ மேற் கூறியவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:காலக்கிரமத்தில் நிலைமை அபிவிருத்தியடையலாம். காலக்கிரமத்தில் சோவியத் தலைவர்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு இணங்கலாம். கம்யூனிஸடுகளுக்குத் தற்பொழுது தோல்வி ஏற்பட்டிருப்பதால் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி குறைந்து விட்டதென்று கூற முடியாது. யு. எஸ். தற்பொழுது தனது பாதுகாப்பைப் பலப்படுத்திகொண்டிருப்பதால், யுத்தம் ஏற்பட்டேதீரும் என்பதில்லை.

ஸ்ரீ பவுல்ஸ மேலும் கூறியதாவது:- "மத்ய ஐரோப்பாவில் ரஷ்யா பொறுப்பில்லாமல் ராணுவ ஒப்பந்தம் கொண்டு வருகிறது இதற்குக காரணம் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிககா முதலிய பிரதேசங்களில் ரஷ்யாவின் பொருளாதார அரசியல் முயற்சிகள் தோல்வியடைந்திருப்பதே காரணம். ஐரோப்பாவில் சோவியத் கொள்கை பூர்ணமாகத் தோல்வியடைந்து விட்டதென்பதற்கு பெர்லினைத் துண்டாககி அவர்கள் வைத்திருப்பது ஒன்றே போதும்.

## தென்மேற்கு ஆபிரிக்க நிலைமை

நியூயோர்க், நவ 9

நிதென்மேற்கு ஆபிரிக்காவில் நிலைமை ஆபத்தாகவுள்ளதாக தன்மேற்கு ஆபிரிக்கா சம்பந்தமான ஐ. நா. உபகமிட்டி தெரிவித்துள்ளது. ஐ. நா தலையிட்டால்தான் அங்கு ஆயுதச்சண்டையை நிறுத்தமுடியுமென அது தெரிவித்துள்ளது.

## அணுஆயுத சோதனைத் தடை

### பேச்சுவார்த்தை நடத்த ஐ. நா. கோரிக்கை

நியுயோர்க், நவ. 9

அணுஆயுத சோதனைகளைத் தடை செய்வதற்கு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான பேச்சு வார்த்தைகளை வல்லரசுகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று ஐ. நா. மகாசபை நேற்று ஒரு தீர்மானத்தின் மூலம் கேட்டுக் கொண்டது. இத்தீர்மானத்தை ரஷ்யா ஆதரிக்கவில்லை.

## அமெரிக்காவுக்கு புதிய சவால்

வாஷிங்டன், நவ. 9

ஐரோப்பிய பொதுமார்க்கட் அமெரிக்காவுக்கு வருங்காலத்தில் ஒரு சவாலாக இருக்குமென்று அமெரிக்க ஜனதிபதி கென்னடி தெரிவித்தார். அமெரிக்க வர்த்தக கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்துவதுபற்றி தாம் யேசசனை செய்துவருவதாகவும் ஜனதிபதி கூறினர்.

# "நேருவிடமுள்ள மதிப்பு உயர்ந்துள்ளது"

## நிருபர்கள் மகாநாட்டில் கென்னடி அறிவிப்பு

### கூட்டறிக்கை இன்றுவெளியாகும்

வாஷிங்டன், நவ. 9

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் நேற்று மூன்ருவது தடவையாகச் சந்தித்து பலவிஷயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஸ்ரீ நேருவும் திரு. கென்னடியும் மட்டும்தான் நேற்றுச் சந்தித்துப் பேசினர். அவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயம் அவர்களது ஆலோசகர்கள் மாளிகையின் மற்ருெரு அறையில் உட்கார்ந்திருந்தார்கள். இரு தலைவர்களும் நேற்று 90 நிமிடங்கள் பேசினர்கள்.

நேற்றைய சந்திப்பு முன்னர் திட்டமிடப்படவில்லை. இன்று இரு தலைவர்களும் கடைசித் தடவையாகச் சந்தித்துப் பேசுகின்றனர். நாளை கூட்டறிக்கையொன்று வெளியாகும்.

நேற்றைய சந்திப்பின்போது சுமார் இருபது நிமிஷங்கள் மாளிகையின் பூங்காவில் இரு தலைவர்களும் நடந்து கொண்டு இலையுதிர்கால வெயிலின் சுகத்தை அனுபவித்தபடி பேசினர்.

இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசிய விஷயங்களில் பல நேற்றைய சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டன வென்று ஜனதிபதி மாளிகை பத்திரிகைக் காரியதரிசி தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்குப் பின் நிருபர்களைச் சந்தித்த அமெரிக்க ஜனதிபதி தங்கள் பேச்சுவார்த்தை உபயோககரமானதாக இருந்தது என்ருர்.

### நேருவிடம் அதிகமதிப்பு

பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஜனதிபதி கென்னடி நேற்று பேசுகையில் ஸ்ரீ நேருவுடன் தாம் நடத்திய ஆலோசனைகள் மதிப்புள்ளவையாக இருந்தனவென்று கூறினர்.

"ஸ்ரீ நேருவிடம் எனக்கு எப்போதுமே அதிகமதிப்பு உண்டு. இப்பொழுது அவரைச் சந்தித்துப் பேசியபின் அவர்மீது எனக்குள்ள மதிப்பு இன்னும் உயர்ந்துள்ளது" என்று திரு. கென்னடி தெரிவித்தார்.

"எங்கள் இருவருக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் கருத்துவேறுபாடுகள் நோக்கத்தைச் சந்தேகிக்க வைக்கக் கூடாது" என்று ஜனதிபதி கூறினர்.

### கம்யூனிஸ்ட் சார்புடையதா?

"எந்த நாட்டின் கொள்கையும் அதன் பிரதேச அமைப்பையும் உள்நிலைமைக் கூறுகளையும் பொறுத்தது" என்று சமீபத்தில் பாரதப் பிரதமர் ஒரு வைபவத்தில் தெரிவித்த கருத்து அவரது போக்கு கம்யூனிஸ்ட் சார்புள்ளதாகத் தோன்றுவதாக அமெரிக்காவில் கருதப்படுகிறதல்லவா?" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு ஜனதிபதி கென்னடி பின்வருமாறு குறிப்பிட்டார்:

அமெரிக்காவிலுள்ள பகுத்தறிவுபடைத்த மக்களிடையே எவரும் இப்படிக் கருதமாட்டார்கள். தனிநபர் சுதந்திரத்தில் ஸ்ரீ நேருவுக்கு எப்பொழுதும் நம்பிக்கை உண்டு. ஸ்ரீ நேருவும் பாரத நாட்டு மக்களும் தனிமனித சுதந்திரத்தை பேணுபவர்கள். தனிமனிதர் சுதந்திரம் கலாசார, சமய நெறியாக பாரதநாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறது.

## ராணியின் கானு விஜயம்

லண்டன், நவ. 9

எலிஸபெத்ராணி இன்று கானுவுக்கு விஜயம் செய்கிருர் ராணியின் கானு விஜயத்தை ஒத்திவைப்பதா இல்லையா என்பது பற்றி பிரிட்டிஷ் மந்திரி சபை நேற்று ஆலோசனை செய்தபின் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் ராணியைச் சந்தித்தார்.

இதன்பின் திட்டமிட்டபடி ராணி கானுவுக்கு விஜயம் செய்வார் என்று பிரதமர் மாக்மிலன் பார்லிமெண்டில் அறிவித்தார்.

## சட்டவிரோதக் குடியேற்றம் நாட்டை அழித்துவிடும்

—எம். பி. கருத்து

கடுகணைவை, புதன்

"சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க கரையோரப் பகுதியில் இராணுவத்தினரைக் காவல்புரியச்செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எடுத்துவந்துள்ளது என யட்டிலுவரா எம். பி. திரு. யு. பி வீரகேரா பெராதனை ஜங்ஷனில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:

நான் சில உத்தியோகஸதர்களுடன் வடமாகணத்துக்குச் சென்றிருந்தபோது அங்கு சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் பெருந்தொகையாக வருவதைப் பார்த்தேன். இந்தத் தொந்தரவுகளைநீக்காவிட்டால் 'கள்ளத்தோணிகளால் நாடு அழிக்கப்பட்டுவிடும். உள்ளூர் மக்கள் இதனல் பெரிதும் அவதிக்குள்ளாவார்கள்.

தமிழர்கள்மீது விரோத மனப்பை கொண்டு இவ்விதம் நான் கூறவில்லை.

# தேங்காய், பாக்கு உற்பத்தித் திட்டம்

## மேற்பார்வைச் சபை நியமனம்

சென்னை, நவ. 9

தமிழ் நாட்டில் தேங்காய், பாக்கு உற்பத்தித் திட்டம் பற்றி மேற்பார்வைசெய்வதற்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒரு சபையை நியமித்துள்ளது.

தேங்காய், பாக்கு ஆகியவைகளின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவை பற்றி இச்சபை மேற்பார்வை செய்யும்.

---

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் மத்திய சன சமூக நிலைய மண்டபத்தில் நிலைய உபதலைவரும், சமூக சேவையாளருமான திரு. நா. கிருஷ்ணசாமி தலைமையில் சந்தானகுரவர் நால்வருள் ஒருவரான மெய்கண்டதேவர் குருபூசைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# தேசிய அபிவிருத்தி வரியும் எம். பி. க்களும்

கொழும்பு, வியாழன்

எம். பி. க்கள் தேசிய அபிவிருத்தி வரியிலிருந்து விலக்கப்பட்டவர்களா? என்ற பிரச்சினை இப்பொழுது எழுந்துள்ளது. எம். பி. க்களின் அக்டோபர் மாதச் சம்பளத்திலிருந்து அபிவிருத்தி வரி அறவிடப்படவில்லை.

எம். பி. க்கள் அந்தப் பதவியில் நிரந்தரமாகத் தொழில் புரிந்து சேவை செய்யவதில்லை என்ற காரணத்தால்தான் இவ்விதம் அபிவிருத்திவரி அவர்களிடமிருந்து அறவிடப்படவில்லை. எனத் தெரிகிறது.

வரி விலக்கு சம்பந்தமான விதிகள் பற்றி அறிவிக்குமாறு வருமானவரி கமிஷனர் விரைவில் அட்டர்னி ஜெனரலைக் கேட்டுக்கொள்வார் என அறியப்படுகிறது.

## கென்யா சுதந்திரம்

### 'பெப்ரவரிக்கு முன் கிடைக்கவேண்டும்'

லண்டன், நவ. 9

1962 பெப்ரவரி முதல் திகதிக்கு முன் கென்யாவுக்கு விடுதலையளிக்கவேண்டுமென்று திரு. ஜோமோ கென்யாட்டா தலைமையில் லண்டன் வந்துள்ள கென்யா ஆபிரிக்க தேசிய யூனியன் தூதுகோஷ்டி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

உகண்டா விடுதலைப் பிரச்னை பற்றியும் விரைவில் முடிவு செய்யவேண்டுமென்றும் தூதுகோஷ்டி கேட்டுள்ளது.

# திருமதி கென்னடியின் இந்திய விஜயம் ஒத்திவைப்பு

வாஷிங்டன் நவ 9

அமெரிக்க ஜனதிபதியின் மனைவி திருமதி ஜாக்குலின் கென்னடி தமது இந்திய பாகிஸ்தான் விஜயத்தை அடுத்தவருடம் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

இம்மாத இறுதியில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அவர் விஜயம்செய்வதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவுடனும் இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர் டாக்டர் கல்பிரய்த், வாஷிங்டனிலுள்ள பாகிஸ்தான் தூதர் ஆகியோருடனும் ஆலோசனை செய்த பின்னரே திருமதி கென்னடியின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 26ம் திகதி நடைபெறும் பாரதக் குடியரசு தினக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு அதிக நாள் இந்தியாவில் தங்கியிருக்கக்கூடிய அவகாசத்துடன் இந்தியாவுக்கு வருமாறு திருமதி கென்னடியை பிரதமர் நேரு கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

## அடினேரின் அமெரிக்க விஜயம்

வாஷிங்டன், நவ. 9

மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கொன்ராட் அடினேர் இம்மாதம் 20, 21-ந் திகதிகளில் வாஷிங்டனுக்கு விஜயம்செய்து ஜனதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

யாழ்- பாடசாலைகள் உதைபந்தாட்டம்

# இறுதீ ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி கலந்துகொள்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க அமைப்பின் கீழ் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது.

இரண்டாவது கோஷ்டி இறுதி ஆட்டத்தில் மகாஜன் கல்லூரி, ஸ்தந்தவரோதயக் கல்லூரியுடன் ஆடுவதற்கு தகுதி பெற்றிருக்கிறது. முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மத்திய கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரியை 3-1கோல்களால் தோற்கடித்ததால் மகாஜனக் கல்லூரி 2-ம் கோஷ்டி இரண்டாம் குழுவில் முதலாம் இடம் பெற்றுள்ளது

மகாஜனக் கல்லூரி முதலாம் கோஷ்டியும் இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்கிறது



# மங்கையர் உலகம்



## நெற்றியில் துலங்கும் பொட்டு மங்கையரின் ஓர் அழகுச் சின்னம்

**தமிழ்ப் பெண் தனது நெற்றியில் இட்டுக்கொள்ளும் பொட்டு அவளது அழகு அம்சங்களில் மிக முக்கியமானதொன்று. பெண்ணின் அழகை அதிகப்படுத்தும் பொட்டு வெளிநாட்டினரின் ஆர்வத்தை ஓரளவுக்குத் தூண்டவல்லது. அமெரிக்காவுக்குச் சென்ற ஓர் இந்தியப் பெண்ணின் நெற்றியிலிருந்த பொட்டு அமெரிக்கர் ஒருவரின் கவனத்தைக் கவர்ந்த வரலாறு இங்கு சுவையாகத் தரப்பட்டுள்ளது.**

(சீதா சர்மா)

வயது வந்த அமெரிக்கர் ஒருவர் என் எதிரே உட்கார்ந்திருந்தார். அமெரிக்கா தேசத்தில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். நான் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ரயில் வண்டி நியூயோர்க் பட்டணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ரயிலில் எனக்கு எதிராக உட்கார்ந்திருந்த வயோதிபர் சிறிது சங்கடப்படுவதை அவதானித்தேன். அவர் முகம் ஒரு கேள்விக் குறியைக் காட்டியது. பேசாதிருப்பதற்குச் சங்கடப்பட்டவர்போல, எனக்கு முன்னர் சிறிது குனிந்தார். அவரின் வாய் ஏதோ முணுமுணுத்தது.

"மன்னிக்க வேண்டும் அம்மா! உமது நெற்றியிலிருந்து இரத்தம் கசிவதை நீர் உணரவில்லையா?" என்று என்னை ஆங்கிலத்தில் கேட்டார். எனக்குச் சிரிப்பு வந்தது. சத்தம்போட்டுச் சிரிக்க முயன்ற நான் அந்த அமெரிக்கரின் முகத்தில் ஆர்வக் குறியை அவதானித்தேன். இவர் வேடிக்கையாகப் பேசினரா அல்லது உண்மையில் அவருக்கு விஷயம் விளங்கவில்லையா என்று யோசித்தேன். அவருக்கு உண்மையில் விஷயம் விளங்கவில்லைத்தான்.

"இரத்தம்வடியவில்லை. அது லிப்ஸ்டிக்" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தேன். "உனது நெற்றியிலா?" என்று பரபரப்புடன் கேட்டார். 'ஆமாம். அது ஒரு வகுப்பினரின் அடையாளம். நான் ஒரு இந்து. விதவைகளைத் தவிர, இந்துப் பெண்கள் பெரும்பாலோரும் தமது நெற்றியில் அடையாளம் வைப்பதுண்டு. நீங்கள் இதற்கு முன்னர் ஒரு இந்தியப் பெண்ணையும் பார்த்ததில்லையா?"

நான் கேட்டது ஓர் அசட்டுக் கேள்விதான். அவர் உண்மையில் இந்தியப் பெண் ஒருத்தியை அதற்குமுன்னர் கண்டிருந்தால் அவ்வாறு குழப்பமடைந்திருக்கமாட்டார். அவரது ஆர்வத்தை ஒருவாறு குறைக்க முயன்றேன். ஆனல் நான் கூற என்ன இருந்தது.

ஐரோப்பிய பெண்களைப் போலத்தான் இந்திய பெண்களும் அழகாகத் தோற்றமளிக்க விருப்பமுடையவர்கள் என்றேன். வாசனைத் திரவியங்கள் 'மேக்அப்' போன்றவற்றை நாமும் உபயோகித்துக்கொள்கிறேம் என்றேன். நான் சும்மா அலட்டிக்கொண்டேன் என்று அவர் நினைத்துக்கொள்ளாதபடி, சிறிது அர்த்தரீதியாகப் பேச ஆரம்பித்தேன்.

"பல வருடங்களுக்குமுன்னர் இந்து சமயத்தவரிடையே உள்ள உயர்குலத்தவர்களாகிய பிராமணர்கள் இதே போன்ற அடையாளத்தை நெற்றியில் இட்டுவந்தார்கள். இது காரணமாகவே இது சாதிக்குறி அல்லது சாதி அடையாளம் எனக் கொள்ளப்படுகின்றது."

எனது நெற்றியை மீண்டும் ஒருமுறை பார்த்த வண்ணம், "அப்படியானல் நீயும் ஒரு பிராமணப் பெண்ணு?" என்ருர்.

"இல்லை, இந்தியாவில் இப்போது சட்டப்படி ஜாதி வேறுபாடு இல்லை" என்றேன். திருமணமாகப்போகும்பெண்களே நெற்றியில் பொட்டு இட்டுக்கொள்வார்கள். மணமாகாத பெண் பொட்டு இட்டுக்கொள்ளத் துணிவதில்லை."

"பொட்டு?"

என்று ஆச்சரியமாகச் சொல்லிப் பார்த்தார். ஆம் 'பொட்டு' என்றுதான் அந்தச் சின்னத்தைக் கூறுவது. ஆனல் கும்-கும், பின்டி, டிக்கா அல்லது முக்கன் என்றும் அதை சொல்வார்கள் எனக் கூறிச் சிரித்தேன்.

"ஓ அப்படியென்ருல் நீர் மணமான பெண் அல்லவா?" "இல்லை, இல்லை. நான் இன்னும் மணம் செய்துகொள்ளவில்லை. இன்றைய இளம் இந்துப் பெண்களும் பழைய வழக்கத்துக்கு மாருக பொட்டிட்டு வருகிறேம்; அது அழகாக இருக்கிறது என நாம் கருதுகிறேம். பலவித நிறங்களிலும் பலவித அடையாளங்களில் நாம் பொட்டிட்டுக் கொள்கிறேம். புள்ளி அடையாளம் தொடக்கம் கேள்வி அடையாளம் வரை பலவித அடையாளங்களிலும் நாம் பொட்டு வைத்துக்கொள்வோம். நாம் அணியும் புடவையின் நிறத்துக்கேற்ப சிவப்பு, பச்சை, கருப்பு நீலம் முதலிய நிறங்களில் பொட்டு எவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும் என்று சட்ட வரையறை எதுவுமில்லை. எமக்கு இயல்பு இருந்தால் ரத்தினக்கல் பதித்த பொட்டும் வைத்துக்கொள்வோம்."

"அப்படியானல் உங்கள் ஆடை அலங்காரங்களில் அதுவும் ஒன்று அப்படித்தானே?" நான் தலை அசைத்தேன். நியுயோர்க் பட்டணத்தை ரயில் அணுகிக்கொண்டிருந்தபோது, அந்த அமெரிக்கர் என்னைத் திரும்பவும் ஏற இறங்கப் பார்த்தார். நன்ருக என்னைப் பார்த்த அந்த அமெரிக்கர், "பெண்ணே உன்னைப்போல நான் இருந்தால் அந்த அடையாளத்தை ஒரு ஜாதிக்குச் சின்னம் என்று கூறமாட்டேன். அதை ஓர் அழகுச் சின்னம் என்றே கூறுவேன். உண்மையில் அது ஒரு அழகுச் சின்னம்தான். உனது சுய அழகை அது மேலும் அதிகமாக எடுத்துக்காட்டுகிறது" என்ருர் அவர்.

## 'செல்லமாக வாழ்வதற்கு' தேவையானது என்ன?

— கனகம் —

'எவ்வளவு செல்லமாக வளர்ந்தேன். இப்பொழுது இப்படியிருக்க வேண்டியிருக்கிறது.'

இக்காலத்துப் பெண்களிற் பலர் தம் கணவன்மாரிடம் இப்படிப் பெருமையாக அடிக்கடி கூறுவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிருர்கள்.

இதனல், சில சமயங்களில் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் சச்சரவுகள் வளர்ந்துவிடுகின்றன.

எந்நேரமும் ஓய்வு எடுப்பதில் இவர்களுக்குப் பெரு விருப்பம். இப்படி வேலையின்றிச் சொகுசாக இருப்பதே வாழ்க்கை எனத் தவருகக் கருதிக் கொள்கிருர்கள். இதனல் சோம்பல் மிகுந்து நோய் வரக் காரணமாகிவிடுகிறது என்பதை இவர்கள் அறிவதில்லை.

தமக்கு வேண்டிய வேலைகளைக் கூட இவர்கள் செய்வது பற்றி அக்கறை காட்டுவதும் இல்லை. தமது இல்லத்தைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமேயென்பதைக் கூட நினைப்பதில்லை. இதைப் பற்றிக் கணவனே அல்லது வேறு யாராவது எடுத்துக் கூறினல் 'நான் செல்லமாக வளர்ந்தவள் இதையெல்லாம் என்னல் செய்ய முடியாது' என்று மறுத்து விடுகிருர்கள். இதனல் மனக்கசப்பு வளருகிறது. கொண்ட கணவனின் அன்பை இழக்க நேரிடுகிறது.

செல்லமாக வளருவது என்ருல் அன்புடன், ஆதரவுடன் வளருவது என்றுதான் அர்த்தம். மற்றவர்களுக்கு அவர்கள் விரும்பியவற்றைச் செய்யாமல் நாம் எப்படி அவர்களிடமிருந்து அன்பை ஆதரவைப் பெற நினைக்கலாம். செல்லமாக வளர்ந்தவர்கள் சோம்பேறிகளாக வாழ வேண்டும் என்பது நியதியல்ல. செல்லமாக வளர்வது என்ருல் சோம்பலாக வாழ்வது என்பதல்ல. செல்லமாக வாழ்வது என்ருல் பிறர் ஆதரவு அணைப்பு இவை தேவை. இதற்கு சுறுசுறுப்பு தேவை, மலர்ந்த முகம் தேவை. கணவனின் தேவைகளை உணர்ந்து கடமையாற்றும் மனைவிதான் ஆதரவைப் பெறுவாள். அன்பைப் பெறுவாள். அப்பொழுதுதான் அவள் செல்லமாக வாழ முடியும். அவளுக்குத் தேவையானதை அவன் தானே உணர்ந்து வாங்கி வரத் தயாராக இருப்பான்.

எனவே, செல்லமாக வாழ்வதற்கு நாம் செம்மையாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும். கனிவான உபசரிப்பால், அன்பும் சேவையால் பிறர் நம்மீது அன்பு செலுத்தக் கூடியவகையில் நாம் கடந்து கொள்வதாலேயே நாம் என்றும் செல்லமாக வாழ முடியும்.

## திருமணத் தொடர்பும் இயந்திரத் தொடர்பும்

திருமணம் பூர்வீகத் தொடர்பினல் ஏற்படுவது என்று கருதப்பட்டு வருகிறது. ஆனல் நியூயார்க்கிலுள்ள மனத்தத்துவ நிபுணர் இந்த திருமணத் தொடர்பு இயந்திரங்களினல் ஏற்படுத்தப்பட்டால் தொடர்பு நீடித்திருக்கும் எனக் கருதுகிருர்.

35 வயதுடைய மனத்தத்துவ நிபுணராகிய டாக்டர் எரிக்ரிஸ் விஞ்ஞான முறையில் திருமணம் நடைபெற்ருல் திருமண வாழ்வு சிறந்துவிளங்கும் என நம்பிக்கை கொண்டுள்ளார். அவர் இதுபற்றி விளக்குவதாவது:-

அதிகமானவர்கள் தமக்கு கந்தவர்களைத் தாம் தேர்ந்தெடுத்துவிடலாமென நினைக்கின்றனர். ஆனல் அதிகமாக இப்படி நிகழ்வதில்லை எனத் தெரிகிறது. இதனல் 50சதவீதத்தினரே திருமண வாழ்வில் வெற்றிபெறுகின்றனர். ஆனல் விஞ்ஞான முறைப்படி திருமணம் செய்து வைத்தால் இத்தொகையை அதிகரிக்கலாம். 70 பெயர்களைக்கொண்ட 70 கார்டுகளை ஒரு மின்சாரக் கருவிமூலம் தேர்ந்தெடுத்துதேர்ந்தெடுக்கப்பட்ட ஜோடிகள் திருமணம்செய்துகொண்டால் இத்திருமணங்கள் வெற்றியையே அளிக்கும். ஆனல் இயந்திரத் தேர்வில் நம்பிக்கை வைப்பது அவர்களைப்பொறுத்ததே.

## "சாப்பிடுவதும் ஒரு கலையே"

—மந்திரி பக்தவத்சலம்

தமிழ்நாட்டில், குடும்பக் கலைப் பயிற்சி நிலையம் ஒன்றை மந்திரி பக்தவத்சலம் சமீபத்தில் திறந்து வைத்துப் பேசியதாவது:-

வாழ்வுக்கு அடிப்படையானது குடும்பக்கலை. குடும்பம் சீராக அமைவதற்கு குடும்பக் கலை பயிற்சி அவசியமாகும்.

சமையல் சிறந்த கலைதான். சில பெண்கள் அடுப்பு ஊதுவதைப்பற்றிக் கேவலமாக நினைக்கிருர்கள். கூர்ந்துபார்த்தால் ஒப்புயர்வற்ற கலை சாப்பிடுவதற்குத்தான் என்று சிலருக்குத் தெரியாது. தனியாக உட்கார்ந்து வயிற்றை நிரப்பக்கூடாது. 10 பேர்களோடு உட்கார்ந்து சாப்பிடவேண்டும் இலையில் போட்ட சாப்பாட்டை ஒழுங்காக, சுத்தமாகச் சாப்பிடுவதும் ஒரு கலைதான்.

குடும்பப் பயிற்சி பெற்ற சேவகிகள் கிராமத்திலும் தொண்டு செய்து உயர்த்த வேண்டும். குடும்பக்கலை பயிற்சி நிலையம் இரண்டுதான் தமிழ் நாட்டில் இருக்கிறது. இது பெண்களுக்கு முக்கியமான பாடம் குடும்பக்கலை. படிப்பு நாகரிகமாயிற்று, இப்பொழுது கல்லூரிகளிலும் இந்த போட்டி இருக்கிறது. கிராமமக்களுக்குத் தொண்டு செய்ய குடும்பக்கலைப்பயிற்சி ஏற்படுத்தி இருக்கிறேம்.

## அமெரிக்க ஒலிபரப்பு

வாஷிங்டன், நவ. 8

சோவியத் சர்க்கார் அணு ஆயுத சோதனைகளை நடத்தி உலகம் முழுவதிலும் கதிரியக்கத்தைப் பரப்பி வருவது பற்றி யு. எஸ். ரேடியோ நிலையம் சோவியத் மக்களுக்கு சக்தி வாய்ந்த டிரான்ஸமிட்டர்கள் மூலமாகத் தெரிவிக்கும்

8 மொழிகளில் ஒலிபரப்பப்படும். சோவியத் மக்களுக்குப் பின்வருமாறு ஒலி பெருக்குவார்கள்:-

"அசுர அணு ஆயுத சோதனைகளை உங்கள் சர்க்கார் நடத்தி வருவது உங்களுக்கு தெரியுமா?

"இநதச் சோதனைகளால் வருங்கால சந்ததிகளுக்கு அபாயம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்திருப்பது உங்களுக்குத் தெரியுமா?

உலக முழுவதும் உங்கள் சர்க்காரின் நடத்தையை கண்டனம் செய்திருப்பது உங்களுக்குத் தெரியுமா?

உங்களுக்கு எவ்வாறு தெரிய முடியும்? உங்களுக்குத் தகவல் தெரியாதபடி இருட்டடிப்புச் செய்திருக்கின்றனர் உங்களுடைய சர்க்கார். ஆனல் இந்த விவரங்கள் உலகில் மற்ற எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்கிறது.

உங்கள் சர்க்காரின் யோக்யதையை இன்னும் சொல்லுகிறேம், கேளுங்கள். அணு ஆயுத சோதனைகளை தடை செய்யும் பொருட்டு ஜெனிவாவில் 3 வருடம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. 22 ஷரத்துகளில் 12 ஷரத்துகள் பற்றி உடன்பாடு ஏற்பட்டது. ஆனல் உங்களுடைய சர்க்கார் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டுவிட்டது. பிறகு அணு ஆயுத சோதனைகளையும் மீண்டும் உங்களுடைய சர்க்கார் ஆரம்பித்து விட்டனர்.

"முதலில் மீண்டும் அணு ஆயுதசோதனைகளை ஆரம்பிக்கிறவர்களுககு மகத்தான பொறுப்பு உண்டு என்று உங்களுடைய பிரதமர் குருஷ்சேவ் முன்பு கூறினர். இப்போது அவர் அணு ஆயுத சோதனைகளை ஆரம்பித்திருககிருர்".


தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

**33**
**303** ஊதுபத்திகளை
**3003**

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,

பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.

குருதெனிய.

# வடமராட்சிக் கல்லூரிகள் உதைபந்தாட்டப் போட்டி

## ஹாட்லிக் கல்லூரி 'சாம்பியன்'

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப்பகுதிக் கல்லூரிகளின் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இவ்வருடச் சாம்பியனாக வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலயமும் ஹாட்லிக் கல்லூரியும் கலந்துகொண்டன.

ஹாட்லிக் கல்லூரி 3 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது. கடந்த இரண்டு ஆண்டிலும் சாம்பியனாக வெற்றியீட்டிய தேவரையாளி இந்துக் கல்லூரி இவ்வாண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றது.

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தாரால் நடாத்தப்பட்ட இச் சுற்றுப் போட்டியின் செயலாளராக திரு. வி. கே. நடராசா கடமையற்றினர்.

சாம்பியன் கோஷ்டிக்கு ஆசிரியர் சங்க வெற்றிக்கேடயம் வழங்கப்படும்.

இப் போட்டியில் மொத்தம் ஏழு கல்லூரிகள் கலந்துகொண்டன.

### தொகுதிப் பண்ணைகள் தொழிலாளர் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை தேர்தற் தொகுதிகளிலுள்ள தொகுதிப் பண்ணைகளில் பண்ணைத் தொழிலாளரை அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் இன்றுடன் முடிவடைகின்றன. இத்தொகுதிகளின் நிரந்தரவாசிகளே இதற்கு விண்ணப்பிக்கலாமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

### இராணுவம் வெற்றி

காங்கேசன்துறை வாடிவீட்டில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினருக்கும், காங்கேசன்துறை இராணுவத்தினருக்கும் தீபாவளியைமுன்னிட்டு காங்கேசன்துறை பொலிஸ்மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இராணுவத்தினர் ஒரு ஆட்டத்தால் வெற்றிபெற்றனர்.

திரு. வீரசூரியா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### தீபாவளி விளையாட்டு அரங்கம்

கொல்லங்கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் புன்னாலைக்கட்டுவன் ஆனந்தா விளையாட்டுக்கழகத்திற்கும் தீபாவளியை முன்னிட்டு காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் கொல்லங்கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஒரு ஆட்டத்தால் தோல்வியுற்றது.

திரு. ஆர். கலியுகவரதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### தையிட்டி ஸ்ரார் தோல்வி

சருகம்பானை வளர்மதி விளையாட்டுக்கழகத்திற்கும் தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் தீபாவளியை முன்னிட்டு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வளர்மதி ஒரு கோலால் வெற்றியீட்டியது.

திரு. எ. செல்லத்துரை மத்தியஸதராகக் கடமையாற்றினர்.

### நெல்லியடி விளையாட்டுக் கழகம் தோல்வி

உடுப்பிட்டி, செவ்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி திருஇருதயக் கல்லூரி, நெல்லியடி விளையாட்டுக் கழகத்தை 3—0 கோல்களால் தோற்கடித்தது. கல்லூரி வீரரான எஸ். கந்தசாமியும் கழக வீரர் வி. எஸ். பொன்னம்பலமும் இரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

### கணேசர் கழகம் ஜெயித்தது

பன்னாலை கணேசர் சனசமூக நிலைய உதைபந்தாட்ட வீரர்களுக்கும் சித்திரமேழி பழனி ஆனந்தாக் கிளப் விளையாட்டு வீரர்களுக்கு மிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கணேசர் விளையாட்டுக்கழகம் ஒரு கோலால் வெற்றியீட்டியது.

திரு. எஸ். விநாயகரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### கொக்குவில் இந்து ஜெயித்தது

மாவிட்டபுரம், வியாழன்

கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாம் பிரிவு உதைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் சாவகச்சேரி இந்துகல்லூரி இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் 4 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. எஸ். சிறினிவாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### விளையாடாமலேயே வெற்றி

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழக சுற்றுப் போட்டி அமைப்பின் கீழ் கொல்லங்கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் புன்னாலைக்கட்டுவன் ஆனந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெறவிருந்த கைப்பந்தாட்டப் போட்டிக்கு ஆனந்தாவிளையாட்டுக் கழகம் சட்டதிட்டங்களுக்கு அமைய சமுகமளிக்காததால் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கு விளையாடமலே வெற்றி கொடுக்கப்பட்டது.

## குடும்பஸ்தரை பிரமச்சாரிகள் தோற்கடித்தனர்

வதிரி, வியாழன்

தீபாவளிதினத்தை முன்னிட்டு ஓர் உதை பந்தாட்டப் போட்டி வதிரி டையமன்ட் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டது.

அப் போட்டி அவ்வூர் திருமணம் ஆனவர்களுக்கும் திருமணமாகாதவர்களுக்கு மிடையில் நடைபெற்றது.

போட்டி ஆரம்பத்திலேயே வாலிபர்கள் ஒரு கோலைப் போட்டார்கள். தொடர்ந்து இடைவேளைக்கு முன் முறையே க. இராசதுரை, எம். மணிகலாதன் ஆகியோர் இரு கோல்களைப் போட்டு மூன்று கோல்கள் ஆக்கினர்.

இடைவேளையின் பின்னர் விளையாட்டு மிகவும் விறுவிறுப்பாக போய்க்கொண்டிருந்தது. திருமணமானவர்கள் மிகவும் ஆத்திரத்துடன் விளையாடினர்கள். பின்பு சி. கயிலநாதன், வ. பாஸ்கரன் ஆகியோர் இரு கோல்களைப் போட்டனர்.

இரு கோஷ்டியும் ஒவ்வோர் கோல் கூடுதலாகப் போடுவதற்கு மிகுந்த பிரையாசை எடுத்துக்கொண்டிருந்தன. கலியாணமானவர்களுக்கு ஓர் "பெனல்டி" கிடைத்ததும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. முடிவில் திருமணமாகாதவர்கள் திருமணமானவர்களை 3—2 கோல்களால் தோற்கடித்தனர்.

திருமணமாகாதவர் கோஷ்டிக்கு திரு. என். லோகநாதனும், திருமணமானவர்கள் கோஷ்டிக்கு திரு. டி. இரத்தினசிங்கமும் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

திரு. ஏ. வேலும்மயிலும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### ஒரு கோலால் வெற்றி

உடுவில் விளையாட்டுக்கழகத்திற்கும் தையிட்டி விளையாட்டுக்கழகத்திற்கும் மிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் தையிட்டி விளையாட்டுக் கழகம் ஒரு ஆட்டத்தால் வெற்றியீட்டியது.

### வானொலி நிகழ்ச்சிகள்

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 10-11-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 7-45 எஸ். சோமாஸ்க்கந்தன் - பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கே. பி. இராஜமாணிக்கம் - நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 ஞானஅஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 வி. கே. ஆறுமுகம் - கதாப்பிரசங்கம், 10-15 தேர்ந்தஇசை.

**திருச்சி**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இஞ்சிக்குடி இ.பி. கந்தசாமிப்பிள்ளை - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 டி. பிருந்தா, டி. முக்தா - பாட்டு, 9-15 பலசுணி, 9-50 ப ஸ்வராஜ்குரு - பாட்டு.


தரத்தில், பெறுமதியில்
தன்னிகரற்ற ரேடியோ -

CWE

டெலிபங்கன்

TELE FUNKEN

உலகமடங்கிலுமுள்ள, நல்லனைவற்றையே நாடும் மக்கள் எப்பொழுதும் டெலிபங்கன் ரேடியோக்களையே தெரிவு செய்கிறார்கள். ஏனெனில், அவை அழகான தோற்றமுடையன. நவீன வடிவமைப்பைக் கொண்டன. நேர்த்தியான இரியாம்சையையும், கூடுதலான நம்பிக்கையையும் தருவன.







ஒவ்வொருவரினதும் விருப்பத்திற்கும் வருவாய்க்கு மேற்ப ஒவ்வொரு வானொலிப் பெட்டி உண்டு.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியு. ஈ. ரேடியோப் பகுதி, 85, மெயின் வீதி, புறக்கோட்டை.

ஸி. டப்ளியு. ஈ. ஷாங்ஙு, 24, குமார வீதி, கொழும்பு.

டெலிபங்கன் ஜேர்மன் வானொலிப் பெட்டிகளிலே மிகப்பிரசித்திபெற்ற பெயர்.

நினைவிருக்கட்டும்: ஸி டப்ளியு ஈ பெறுமதி வாய்ந்த சிறந்த பொருட்களையே எப்பொழுதும் வழங்குகிறது.

மனேஜர், ரேடியோ பகுதி, 131, வொக்ஸோல் வீதி, கொம்பனித் தெரு.
டெலிபோன்: 0179702

# எஸ். ஜே. வி.க்கு 18ந் திகதி பொதுவரவேற்பு

## விடுதலையடைந்த எம். பி. க்களுக்கும் உபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி
தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் இம்மாதம் 18ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அவருக்கும் தடுப்புக்காவலிலிருந்து விடுதலையடைந்த தமிழ் எம். பி.க்களுக்கும் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் பொது வரவேற்பளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திரு. செல்வநாயகம் 18ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி விமானத்தில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவர் அங்கிருந்து யாழ்ப்பாண நகரமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

நகர மண்டபத்தில் திரு. செல்வநாயகத்துக்கும் தடுப்புக்காவலிலிருந்து சமீபத்தில் விடுதலையடைந்த இதர தமிழ் எம். பி.க்களுக்கும் பொதுவரவேற்பளிக்கப்படும்.

இந்த வரவேற்பு வைபவத்தில் யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜாவும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

---

## தாதிமார் நியமனம் விண்ணப்பங்கள் பற்றி

### சுகாதார இலாகா அறிக்கை

கொழும்பு, வெள்ளி
சுகாதார இலாகா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"தனிப்பட்ட ஏஜன்சிகள் வெளியிட்டுள்ள பத்திரங்களில் தாதிமார்களாகப் பதிவு செய்து கொள்ளுவதற்கான விண்ணப்பங்கள் பல அனுப்பப்படுகின்றன. தாதிகளாக நியமனம் செய்துகொள்வதற்கு சுகாதார இலாகா பதிவு செய்வதில்லை என்பதை அறிவிக்கின்றோம். அத்தோடு தாதிமார் காலிஸ்தானங்கள் 'கெஸட்' அறிக்கைமூலம் வெளியிடப்பட்டபின்னரே நியமனம் செய்யப்படுவதுண்டு என்பதையும் தெரிவிக்கின்றோம்

'கெஸட்' மூலமோ பத்திரிகைகள் மூலமோ விளம்பரப் படுத்தப்பட்ட பின்னரே தாதிமார் நியமனத்துக்கான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப் படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## மகாதேவ சுவாமிகள் குருபூசை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி
வருகிற 15, 16-ம் தேதிகளில் பரிசுத்த ஸ்ரீ மகாதேவ சுவாமிகளின் குருபூசைத் தின விழா கந்தர்மடம் சிவகுருநாத குருபீட மண்டபத்தில் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் தலைமையில் நடைபெறும். முதல்நாள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்ச்சியில் அபிஷேக ஆராதனைகள், மகேஸ்வர பூசை ஆகியனவும் கலாநிதி வ. பொன்னையா, வித்துவான் க. கார்த்திகேசு ஆகியோரின் உபந்நியாசங்களும் நடைபெறும்.

மறுநாள் 16 ம் தேதி மாலை ஸ்ரீமத் வடிவேல் சுவாமி, பண்டிதர் ச. இராமச்சந்திரன் ஆகியோரின் உபந்நியாசங்கள் நடைபெறும்.

---

## வஸ்திர தானம்

திருக்கோணமலை, புதன்
தீபாவளித் திருநாளையொட்டித் திருமலை சிவயோக சமாஜத்தினதரவிலும் நிஷ்காமிய சேவா சங்கத்தினதரவிலும் ஏழை ஆண்கள் பெண்கள் குழந்தைகளுக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது.

திருவள்ளுவர் கழகத்தில் கலைக் கதம்ப நிகழ்ச்சிகளும், கூட்டு வழிபாடும் தீபாவளித் திருநாளையொட்டி நடைபெற்றன.

---

## கோயிலில் திருட்டு

புசல்லாவ, புதன்
கட்டுக்குத்தானை கடை வீதியைச் சேர்ந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் சுமார் ஐநூறு ரூபாய் பெறுமதி வாய்ந்த அம்பாளின் கிரீடம், ஒட்டியாணம், சுப்பிரமணியரின் வேல் மற்றும் சில வெள்ளிச் சாமான்கள், உண்டியல் பெட்டியில் உள்ள காணிக்கைப் பணம் திருட்டுப்போய் விட்டது.

இது பற்றி பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. புலன் விசாரணை நடைபெறுகிறது.

---

## 82,000 டன் உணவுப் பொருள் இறக்குமதி செய்யவில்லை

கொழும்பு, வியா.
கொழும்புத் துறைமுகத்துக்கு 82,560 டன் நிறையுள்ள அரிசி, மாவு, சீனி ஆகிய உணவுப்பொருள்கள் கொண்டு வந்த கப்பல்களிலிருந்து அவற்றை இறக்குமதி செய்யாததால் கப்பல்கள் துறைமுகத்திலேயே தங்கி நிற்கின்றன.

இங்கு தாமதித்து நிற்பதற்காக ஒவ்வொரு கப்பலுக்கும் நாளொன்றுக்கு உணவு இலாகா 2,500 ரூபாய் கொடுத்துவருகிறது.

---

## பட்டாஸ்வெடி கைப்பற்றப்பட்டது

புசல்லாவ, வியாழன்
புசல்லாவை, ரெட்டப்பாதை ஆகிய கடைவீதிகளில் தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு அனுமதிப் பத்திரம் இல்லாமல் பட்டாஸ், வெடி முதலிய பொருட்களை விற்பனை செய்த வியாபாரிகளின் மீது நடவடிக்கை எடுத்து கைவசமிருந்த பட்டாஸ் கட்டுகளையும் வெடிகளையும் கைப்பற்றியதோடு மேற்படி வியாபாரிகள் மீது புசல்லாவைப் பொலீசார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

---

## கத்தியால் குத்தி காயப்படுத்தியதாக வழக்கு

மாவிட்டபுரம், வியாழன்
இளவாலையைச் சேர்ந்த யுவான் மனுவேல்பிள்ளை என்பவரை அவரின் சகோதரரான யுவான் பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் கத்தியால் குத்தி காயம் உண்டு பண்ணியதாக சங்கானை பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு வைத்திய பரிசோதகரின் சாட்சியத்துடன் இணங்காததால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸலி டி. தாமோதரம் எதிரியை விடுதலை செய்தார்.

---

## சந்தையின் நிலை!

திருக்கோணமலை, புதன்
மூதூர்க், கிராமச் சங்கம் 20,000 ரூபாய் செலவில் ஓர் சந்தையைக் கட்டி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மகாநாம சமரவீராவினால் திறக்கப்பட்டும் இன்னும் உபயோகிக்கப்படாமல் இருந்து வருகின்றது. தற்பொழுது இச் சந்தையில் ஆடுகளும் மாடுகளும்தான் தங்கியிருக்கின்றன.

---

## கிருஷ்ணமேனன்

புதுடில்லி, நவ. 9
ஐ. நா. இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைமைதாங்கும் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இன்று புதுடில்லியிலிருந்து நியூயோர்க் புறப்பட்டார்.

---

# அடித்துக் கொலை செய்ததாக வழக்கு

## அடையாள அணிவகுப்பில் ஒருவர் விடுதலை

மாவிட்டபுரம், வியாழன்
அச்சுவேலியைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்தம்பி, சின்னத்தம்பி தவராசா, சின்னத்தம்பி சபாபதி, ஆறுமுகம் சுப்பையா, சுப்பையா கனகரத்தினம், செல்லர் சிவசுப்பிரமணியம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தசாமி ஆகிய எட்டு பேர்களும் அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவரை அடித்துக் கொலை செய்ததாக காங்கேசன்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் சந்தேக நபர்களை அடையாளம் கண்டு பிடிப்பதற்காக ஓர் அடையாள அணிவகுப்பு அண்மையில் மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்தது.

இந்த அடையாள அணிவகுப்பில் ஆருவது சந்தேக நபரான செல்லர் சிவசுப்பிரமணியத்தை ஒருவரும் (சாட்சின்) அடையாளம் கண்டு பிடியாததன காரணமாக அச் சந்தேக நபரை நீதிபதி இன்று விடுதலை செய்தார். மற்ற ஏழு சந்தேக நபர்களும் 16-ம் திகதிவரை விளக்கமறியலில் வைககப்பட்டுள்ளனர்.

---

## தொலபுரத்தில் சமய வகுப்புகள்

சுழிபுரம், வியாழன்
தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் ஆதரவில் தொல்புரம் அ. மி. பாடசாலை மண்டபத்தில் பிரதிவெள்ளிக் கிழமைதோறும் சமயவகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வகுப்பில் நாயன்மார்களின் சரித்திரம், தேவாரதிருவாசகம், ஒழுக்கம் ஆகியன பற்றி ஆசிரியர்கள் சொற்பொழிவாற்றுகின்றனர்.

---

# யாழ்ப்பாண வட்டார எல்லைகள் விஸ்தரிப்பு

## விசேஷக் குழுவின் சிபார்சு

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாண மாநகரசபையின் வட்டாரங்களைப் பிரிப்பதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட விசேட குழுவின், உத்தியோகப் பற்றற்ற கூட்டம் யாழ்ப்பாணம்மாநகரசபையின் செயற்குழு அறையில் அண்மையில் நடைபெற்றது.

பின்வரும் சிபார்சுகளைச் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது:-

யாழ்ப்பாணம் மாநகர அமைப்புப் படத்தில் ஒவ்வொரு வட்டாரங்களின் எல்லைகளும், அவ்வவ் வட்டாரங்களின் வாக்காளர்கள் தொகையும் குறிக்கப்பட வேண்டும்.

மேற்படி விபரங்களை உள்ளக்கிய மாககர அமைப்புப் படத்தை அடுத்துவரும் மாநகரசபை வட்டாரம் பிரிக்கும் விசேட குழுவுக்கு மராமத்துப் பொறியியலாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன், வட்டாரங்கள் பிரிக்கும் விஷயம் ஒவ்வொரு மாநகரசபை அங்கத்தவர்களுடனும் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால், இது சம்பந்தப்பட்ட விஷயத்தை எல்லா அங்கத்தவர்களுடைய அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் அறியும்பொருட்டு மாநகரசபை உறுப்பினர்கள் எல்லோரையும் எதிர் வரும் குழுக் கூட்டத்திற்கு அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
மற்றும் 5 திரைகளில்
வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!
என். டி. ராமராவ் • பி. கண்ணம்பா
ராஜசுலோசனு • பாலாஜி
எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்
ஆகியோர் நடித்த




இப்பொழுது திரையிடப்படுகிறது!
மாலை 6-30 இரவு 9-30
மனோஹரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன் - சரோஜாதேவி நடித்த
கல்யாண பரிசு
கிங்ஸ் ஒவ் த காணிவல்
(சீரியல் ஆங்கிலப் படம்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.